# سُوْرَةُهُودْ

# ஸூரா ஹூத்
## (அலை)

**11**

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- இந்த அத்தியாயத்தின் நோக்கம் ‘தொடர்ச்சியான சீர்திருத்தப் பணி’ ஆகும்.1
- அலட்சியம் மற்றும் கவனமின்மையை விடுத்து, சமூக மாற்றத்தைத் தொடர்ந்திடுக!
- நபிமார்களில், எந்த நபியின் பெயரால், அத்தியாயம் அமைந்துள்ளதோ! அந்த நபியைப்பற்றிய சிறப்பான குறிப்பு அதில் இடம் பெற்று இருக்கும்.
- இவ்வத்தியாயம் குறித்து, நபி (ஸல்) இப்படிக் கூறினார்கள்: ‘‘ஹூது மற்றும் (அதனையொத்திருக்கின்ற ) சகோதர அத்தியாயங்கள் எனக்கு நரையைத் தந்துவிட்டன. (ஸஹீஹுல் ஜாமி.ஃ. : 3720)2
- இவ்வத்தியாயத்தில், நபிமார்கள் நூஹ் (அலை) , ஹூத் (அலை), ஸாலிஹ் (அலை), லூத் (அலை), ஷுஅய்ப் (அலை), மூஸா (அலை), ஹாரூன் (அலை) என எழுவர் குறிப்பிடப்படுகிறார்கள். தமது சமுதாயத்தின் அநீதியை, அவர்களெல்லோரும் எப்படி எதிர் கொண்டார்கள்? தமது சீர்திருத்தப் பணியை எப்படித் தொய்வின்றி தொடர்ந்தார்கள்? என விளக்கப்படுகிறது.
- இச்சரித்திரங்களை இங்கு நினைவு கூறுவதன் நோக்கம், நபி (ஸல்) அவர்களுக்கு, மன ஆறுதல் தருவதே..! (வசனம் : 120)

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. திருக்குர்ஆனின் பிறப்பிடம், அது கண்ட இயக்கம், மற்றும் காபிர்கள் மேற்கொண்ட நிலைபாடு..! (1-5)
2. அல்லாஹ்வின் சிறப்பும், பிரமாண்டமான அவனது அறிவு மற்றும் வல்லமையும். (6-7)
3. அல்லாஹ்வின் அருட்கொடைகளைக் காபிர்கள், அணுகும் விதம் மற்றும் அவர்களுக்கான தண்டனை விபரம். (8-10)
4. அல்லாஹ்வின் அருட்கொடைகளை மு.ஃ.மின்கள், அணுகும் விதம் மற்றும் அவர்களுக்கான நற்கூலியின் விபரம்.(11)

---

1. معالم في طريق الاصلاح – عبد العزيز السدحان
2. விபரங்களுக்கு: தப்ஸீர இப்னு கஸீர் பாகம்4; பக்கம் 302

5. இணைவைப்பாளர்கள், கொண்ட பகைமையின் காரணமாக, நபி (ஸல்) அவர்கள் எதிர்கொண்ட மனநெருக்கடியும், அவர்களுக்குக் கிட்டிய, அல்லாஹ்வின் தொடர்ச்சியான வழிகாட்டுதலும். (12)
6. இதைப் போன்றதொரு வேதத்தைக் கொண்டுவந்திட, காபிர்களுக்கு விடுக்கப்பட்ட சவால்! (13-14)
7. காபிர்கள் மறுமையைவிட இவ்வுலகிற்குத் தருகின்ற முன்னுரிமை! அதற்குரிய தண்டனை!! (15-16)
8. மு.்.மின்களும் காபிர்களும் சமமாக மாட்டார்கள்.(17)
9. காபிர்கள் மற்றும் அவர்களின் சில தன்மைகள் பற்றிய குறிப்பு. (18-22)
10. மு.்.மின்கள் மற்றும் அவர்களின் சில தன்மைகள் பற்றிய குறிப்பு. (23)
11. மு.்.மின்களுக்கும், காபிர்களுக்கும் உதாரணம் தரப்பட்டுள்ளது. (24)
12. நபிமார்கள் நூஹ் (அலை) , ஹூத் (அலை), ஸாலிஹ் (அலை), லூத் (அலை), ஷுஅய்ப் (அலை), மூஸா (அலை) ஆகியோர்ரின் சரித்திரம் கூறப்படுகிறது. (25-99)
13. தன் அடியார்களை அழிப்பதற்கு முன், அல்லாஹ் அவர்களுக்குத் (திருந்த) அவகாசம் தருகிறான். (100-102)
14. மறுமை நாளின் சில காட்சிகள், முன் வைக்கப்படுகின்றன. (103-109)
15. மூஸா (அலை) அவர்களின் சமூகத்தினர், தவ்றாத் வேதத்தில் கருத்து வேறுபாடு கொண்டதைப் போல், திருக்குர்ஆனில் தர்க்கித்துக் கொள்ள தடை..! (110-111)
16. நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் உம்மத்தினருக்கும், தொழுகை, இஸ்திகாமத் (நிலைகுலையாமை), மற்றும் பொறுமைக்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. (112-115)
17. அல்லாஹு தஆலாவின் வழிமுறையின்படி, முந்தைய சமுதாயத்தினர் தமது குரோதம் மற்றும் அநியாயமான நிலைபாட்டால் அழிக்கப்பட்டார்கள். (116-119)
18. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மன ஆறுதல், மு.்.மின்களுக்கு அறிவுரையாக, காபிர்களுக்கு எச்சரிக்கையாக அமைந்திருப்பதே, திருக்குர்ஆனில் சொல்லப்படுகின்ற சரித்திரங்களின் சூட்சுமம்,

## சில பாடங்கள்
*Few Lessions*

1. கடுமையிலும் கடுமையான சூழ்நிலையிலும், அழைப்புப் பணி மற்றும் சீர்திருத்தப்பணியைத் தொடர்ந்திடுக! 1

1. معافم في طريق الاصلاح – عبد العزيز السدحان

2. திருக்குர்ஆன் அருளப்பட்ட முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக, அடியார்கள் தமதிறைவனை வணங்கி, தமது தவறுகளுக்காக அன்றாடம் தமது இறைவனிடம், பாவமன்னிப்பு மற்றும் பிழைபொறுக்கத் தேடுவதும் உள்ளது.
3. காபிர்கள் திருக்குர்ஆனைச் செவியுற விரும்புவதில்லை.. இவ்வாறு அவர்கள் படைத்தவனைக் கேலி செய்கிறார்கள்
4. வாழ்வாதாரத்தைத் தருவது, அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளதாகும். தாவரங்கள், விலங்குகள், மற்றும் அனைத்து மக்களுக்கும், அல்லாஹ் உணவளிப்பது, அவனுடைய இரக்கத்தின் ஆதாரமாகும்.!
5. அல்லாஹு தஆலா, தன் மகத்தான படைப்புத் திறனை, வானங்கள் மற்றும் பூமியில் வெளிப்படுத்தியுள்ளான்.
6. உலகத்தின் நிலைகள், என்றும் நிலையானவை அன்று!
7. இறை அழைப்பாளர்களும், மார்க்கத்தை எடுத்துரைப்பவர்களும், யாரேனும் ஒருவருடன் தோன்றிய கருத்து வேறுபாட்டால், தமது பணியைக் கைவிடுவது, அவர்களுக்கு உகந்தது அல்ல..! ஏனெனில் அவர்கள் الحق المبين ‘தெளிவான சத்தியத்தின்’ அழைப்பாளர்கள் ஆவர்!.
8. உலகத்தை மட்டும் விரும்புகிறவர்களுக்கு, மறுமையின் அருட்கொடைகள் மறுக்கப்படும்!
9. நூஹ் (அலை) முதல் முஹம்மத் (ஸல்) வரை நபிமார்கள் மற்றும் இரஸூல்மார்கள் யாவரும், தூய தவ்ஹீதின்பால் அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தார்கள்; ஷிர்க்கில் இருந்து தடுத்தவண்ணம் இருந்தார்கள்.
10. நபிமார்களின் சிறப்பு மற்றும் மனத்தூய்மையின் ஆதாரம் - அவர்கள் தமது அழைப்புப் பணிக்காக, எவ்வித கூலியையும் எதிர்பார்க்கவில்லை..!
11. அல்லாஹ்விடம் பாவமன்னிப்பைக் கேட்டு, பிழை பொறுக்கத் தேடுவதன் மூலமாக, இம்மை மறுமை இரண்டிலும், செழிப்பையும் சிறப்பையும் பெற்றிட இயலும்..!
12. பாவங்களுக்காகப் பிழை பொறுக்கத் தேடுவது, நம் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப் படுவதற்கான நிபந்தனையா்யகும்.
13. விருந்தாளியை உபசரிப்பதும், ஸலாம் கூறுவதில் முந்துவதும், இஸ்லாமிய ஒழுக்கமாகும்.
14. இறையச்சமும் மார்க்கத்தோடு தொடர்புடன் இருப்பதும், ஈருலக வெற்றிக்கான சான்றாகும்.
15. இரக்க குணம், இளகிய உள்ளம் மற்றும் இனிய முறையிலான தர்க்கம் யாவும், ஒரு நல்ல இறை அழைப்பாளனின் அடையாளமாகும்.

16. தடுக்கப்பட்டவைகளில் ரோஷம் கொள்வது, மார்க்கமாகும்.
17. ஓரினச் சேர்க்கை மற்றும் மனிதக்-கொலை ஆகியன, ஒழுக்கம் சாரந்த குற்றமாகும்.
18. எடை மற்றும் அளவில் முறைகேட்டில் ஈடுபடுவதும், மோசடி செய்வதும் மிகப் பெரும் குற்றமாகும்; உலகிலும் மறுமையிலும் தண்டனை பெற்றுத்தரக் கூடியதாகும்..!
19. காரணங்களை உருவாக்குகிறவன், அல்லாஹ் மட்டுமே!
20. அல்லாஹ் மக்களுக்கு, நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய அறிவைத் தந்தான்; மேலும் அவர்களுக்குச் சுதந்திரத்தைத் தந்துள்ள அல்லாஹ், அதில் அவர்களிடம் கணக்கும் கேட்பான்.
21. நண்பர்களில், இறையச்சமுடையவர்களைத் தவிர, மற்றவர்கள் மறுமை நாளில் எதிரிகளாக இருப்பர்! இது நல்ல நட்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.
22. மக்களுக்கு அநியாயம் புரிவது, அழிவிற்கான முதற்காரணம் ஆகும். அடுத்தவர் மீது அநீதம் புரிகின்ற ஊராரை, அல்லாஹ் அப்பொழுதே அழித்திடுவான்.
23. அக்கிரமத்தின் போது, மென்மையைக் கடைபிடிப்பதும், அதன்பால் சாய்வதும், தீமையில் பங்கெடுப்பதாகும். அவைகளின் முடிவு மோசமானது.
24. தொழுகை, அமல்களில் அடிப்படையானதாகவும், மார்க்கத்தின் தூணாகவும் விளங்குகிறது.
25. அநீதியும் அழிச்சாட்டியமும் தலைகாட்டும் போது, இணக்கத்தை விரும்புகிறவர்கள், தம் வருத்தத்தைக் கூட வெளிப்படுத்தாமல், அமைதிகாப்பது, அழிவிற்கான ஒரு காரணமாகும்.
26. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள சரித்திரங்கள், நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களின் உம்மத்தினரில் உலக மக்கள் அனைவருக்கும், மன ஆறுதல் மற்றும் அறிவுரையாக அமைந்துள்ளன.
27. அல்லாஹ்வைச் சார்ந்திருப்போருக்கு, அல்லாஹ் போதுமானவன்!

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

❖ ஸூரா யூனுஸ் பொதுவானதாக உள்ளது; ஸூரா ஹூது, விவரிக்கப் பட்டதாக உள்ளது !

الرۚ كِتَابٌ أُحْكِمَتْ آيَاتُهُ ثُمَّ فُصِّلَتْ مِن لَّدُنْ حَكِيمٍ خَبِيرٍ 11:1

11:1. அலி∴ப், லாம், றா. (இது) வேதமாகும் இதன் வசனங்கள்

(பல்வேறு அத்தாட்சிகளால்) உறுதியாக்கப்பட்டு பின்னர் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன- மேலும், (இவை யாவற்றையும்) நன்கறிபவனும், ஞானம் மிக்கோனுமாகிய(இறை)வனிடம் இருந்து(வந்து)ள்ளன.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

مَن كَانَ يُرِيدُ الْحَيَاةَ الدُّنْيَا وَزِينَتَهَا نُوَفِّ إِلَيْهِمْ أَعْمَالَهُمْ فِيهَا وَهُمْ فِيهَا لَا يُبْخَسُونَ 11:15

11:15. எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) நாடினால் அவர்களுடைய செயல்களுக்குரிய (பலன்களை) இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவோம் அவற்றில், அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள்.

أُولَٰئِكَ الَّذِينَ لَيْسَ لَهُمْ فِي الْآخِرَةِ إِلَّا النَّارُ ۖ وَحَبِطَ مَا صَنَعُوا فِيهَا وَبَاطِلٌ مَّا كَانُوا يَعْمَلُونَ 11:16

11:16. இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவுமில்லை, (இவ்வுலகில்) இவர்கள் செய்த யாவும் அழிந்துவிட்டன் அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!

وَيَا قَوْمِ أَوْفُوا الْمِكْيَالَ وَالْمِيزَانَ بِالْقِسْطِ ۖ وَلَا تَبْخَسُوا النَّاسَ أَشْيَاءَهُمْ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ 11:85

11:85. "(என்) சமூகத்தவர்களே! அளவையிலும் நிறுவையிலும், நீதியைக் கொண்டு நீங்கள் பூர்த்தி செய்யுங்கள். (மக்களுக்குக் கொடுக்க வேண்டிய) அவர்களுடைய பொருட்களைக் குறைத்து விடாதீர்கள். பூமியில் விஷமம் செய்துகொண்டு (வரம்பு மீறி) அலையாதீர்கள்.

## அல்ஹதீஸ்

அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) கூறினார்கள்: "ஒரு வியாபாரி, மக்களுக்குக் கடன் தருகிறவராக இருந்தார். அப்போது கஷ்டமான நிலையில் ஒருவரைக் காணுகின்றபோது, (பணியாற்றுகின்ற) தன் இளைஞர்களிடத்திலே அவர் இப்படிக் கூறுவார்.. 'இவரை (கடனை) மன்னித்து விடுங்கள்! அல்லாஹ் நம்மை (தவறுகளை) மன்னித்து விடலாம்!' எனவே அல்லாஹ், அவரை மன்னித்து விட்டான்" (அல் புகாரீ: 2078)

# سُوْرَةُيُوسُفْ


# ஸூரா யூஸுப் (அலை)

12

இது ‘மக்கீ’ ஸூரா ஆகும்.

# சில நோக்கங்கள்
## *Few Objectives*

- அல்லாஹ்வின் திட்டமிடல் மீது நம்பிக்கை.. (பொறுமையைக் கடைபிடி! நிராசை கொள்ளாதே!)1
- ஒரு கனவின் மூலம் இவ்வத்தியாயம், ஆரம்பமாகிறது; அக்கனவிற்குரிய விளக்கத்தின் மூலம் நிறைவடைகிறது!. (வசனங்கள் 4, 100)
- நபி யூஸுஃப் (அலை) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த, ஏற்ற இறக்கங்களை, விளக்குகின்ற சுருக்கமான வரைபடம்:-




- நபி யூஸுஃப் (அலை) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த, ஏற்ற இறக்கங்களை, விளக்குகின்ற சுருக்கமான வரைபடம்:-
- நபி (ஸல்) அவர்களின் மன ஆறுதலுக்காக இவ்வத்தியாயம் அருளப்பட்டுள்ளது.
- நபி (ஸல்) அவர்கள் மற்றும் நபி யூஸுஃப் (அலை) அவர்களின் சரித்திரங்களில் ஒற்றுமை இருக்கிறது: நபி (ஸல்) அவர்களும், தன் ஊர் மக்களால் - தன் குரைஷிச் சகோதரர்களால், வெளியேற்றப் பட்டார்கள்.. ஹிஜ்ரத் செய்தார்கள்.. பிறகு அவர்களின் கைகளில், ஆட்சியே வந்தது! முன்பு தனக்குத் துன்பம் விளைவித்த தன் குரைஷிச் சகோதரர்களை மன்னித்து لا تثريب عليكم اليوم ‘இன்று பழிவாங்குதல் இல்லை” என்பதைச் செயல்படுத்தினர். 2
- இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள வரலாறு أحسن القصص ‘அழகிய சரிதை’ எனப்படுகிறது!3

---

1. شرح كتاب التوحيد الذي هو حق الله على العبيد : صالح بن عبد العزيز أل الشيح
2. مكة بلد الله الحرام –عبد الملك القاسم
3. யூஸுஃப் அத்தியாயத்தின் 100 பயன்கள்- (பளீலதுஷ்ஷைக் முஹம்மத் ஸாலிஹ் அல் முன்ஜித்)

❖ படிப்பினை, அறிவுரை, உபதேசம், என்கிற அடிப்படையில், அரசர்கள், அதிகாரங்கள், அறிஞர்கள் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.. கல்வியும் ஆட்சியும் ஒப்பிடப்படுகின்றன. கல்வியின் சிறப்பு எப்பொழுதும், மேலோங்கியே இருக்கும்!

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. திருக்குர்ஆனின் தன்மைகளும், அழகிய சரிதை இடம் பெற்று இருப்பதன் விபரமும்..! (1-3)
2. யூஸுஃப் (அலை) அவர்களின் கனவும், தந்தையின் விளக்கமும்(6-4)
3. யூஸுஃப் (அலை) அவர்களை, அவர்களின சகோதரர்கள் கிணற்றில் போட்ட விபரம்.(7-10)
4. யூஸுஃப் (அலை) அவர்களின சகோதரர்கள், சதித்திட்டத்தை நிறைவேற்றிய விபரம்.(11-18)
5. யூஸுஃப் (அலை) அவர்கள் கிணற்றிலிருந்து வெளிவந்து, மிஸ்ரு-வாசிகளிடம் விற்பனையான விபரம்.(19-20)
6. யூஸுஃப் (அலை) மிஸ்ரில் தங்கியதும், அங்கிருந்த ஒரு மந்திரியின் மனைவியால் அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு சோதனையில் இருந்து தப்பித்ததும்..! (21-29)
7. மந்திரி–மனைவியின் நிகழ்ச்சியைப் பற்றி செய்தி பரவுதல், அதில் அப்பெண் மேற்கொண்ட நிலைபாடு மற்றும் யூஸுஃப் (அலை) அவர்கள் சிறையில் போடப்படுதல். (30-35)
8. சிறையில் யூஸுஃப் (அலை) அவர்களின் நிகழ்வுகள். (36-42)
9. மிஸ்ருவின் அரசர், கண்ட கனவும், யூஸுஃப் (அலை) விளக்கம் தந்த விபரமும். (43-49)
10. அரசர், யூஸுஃப் (அலை) அவர்களைச் சிறையில் இருந்து, விடுவித்தல் மற்றும் யூஸுஃப் (அலை) குற்றமற்றவர் என நிரூபணமாகுதல். (50-53)
11. சிறையில் இருந்து யூஸுஃப் (அலை) விடுதலையடைதல், தன்னைப் பூமியின் கருவூலங்களுக்குப் பொறுப்பாளராக நியமித்திட, கோரிக்கை விடுத்தல் மற்றும் நியமனம் பெறுதல். (51-57)
12. யூஸுஃப் (அலை), தன் சகோதரர்களை அறிந்து கொள்ளுதல், தன் உடன் பிறந்த சகோதரனை, அழைத்துவரச் சொல்லுதல் மற்றும் (தானிய) விலையைத் திருப்பிக் கொடுத்த விபரம். (52-62)
13. யூஸுஃப் (அலை) அவர்களின் சகோதரர்கள், புன்யாமீனைத் தம்முடன் ‘மிஸ்ரு’-விற்கு அனுப்புமாறு தம் தந்தையை நிர்ப்பந்தித்த விபரம். (63-66)

14. ய.்.கூப் (அலை) தன் பிள்ளைகளுக்குச் செய்த உபதேசம்.(67-68)
15. யூஸுப் (அலை) அழைத்து வரச் சொன்ன சகோதரனை, சகோதரர்கள் அழைத்து வருவதும் தன் திட்டத்தை யூஸுப் (அலை) கூறுவதும். (69-79)
16. சகோதரர்கள் தமக்குள், ஒருவரை ஒருவர் பழித்துக் கொள்ளுதல் மற்றும் நிகழ்ந்ததைத் தந்தையிடம் எடுத்துரைத்தல். (80-82)
17. ய.்.கூப் (அலை), தன் பிள்ளைகளின் பேச்சை நம்பாதிருத்தல், கவலையின் கடுமையால், பார்வை பறி போகுதல் மற்றும் கவலையை, அல்லாஹ்விடம் ஒப்படைத்தல். (83-86)
18. ய.்.கூப் (அலை) தன் இரு பிள்ளைகளைத் தேடுவதற்காக, இதர பிள்ளைகளை அனுப்புவதும், அவர்கள், யூஸுப் (அலை) அவர்களை அறிந்து கொண்டு, தம்மை மன்னிக்க வேண்டுவதும். (87-92)
19. யூஸுப் (அலை), தந்தையின் பார்வை திரும்ப, தன் சட்டையைத் தந்தையின் முகத்தில் போடுவதற்காகக் கொடுத்தனுப்புகிறார்கள்.. தந்தையிடம் மன்னிப்பிற்காக சகோதரர்களின் புகல்.. அவர்களுக்காக ய.்.கூப் (அலை) பிழைபொறுக்கத் தேடுதல்..!
20. யூஸுபு (அலை) அவர்களின் தந்தை மற்றும் சகோதரர்களின் வருகை.. யூஸுபு (அலை), அவர்களைக் கண்ணியப் படுத்துதல்.. யூஸுப் (அலை) கண்ட கனவு நிறைவேறிய விபரம்..! (99-100)
21. அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளை, யூஸுப் (அலை) நினைவு கூர்ந்து, இறுதி முடிவு இனிதாய் அமைய, பிரார்த்தித்தல். (101)
22. யூஸுப் (அலை) அவர்களின் சரித்திரம், முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கான ஆதாரங்களில் ஒன்று.! (102-104)
23. பூமியிலும், வானங்களிலும் பரந்து கிடக்கின்ற, அல்லாஹ்வின் அத்தாட்சிகளைக் காபிர்கள் மறுப்பதும், அதற்குரிய பதிலடியும்..! (105-110)
24. திருக்குர்ஆன் கூறும் சரித்திரங்களிலுள்ள, சூட்சுமத்தின் விபரம்.(111)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. ‘ஆணோ! பெண்ணோ!! கற்பொழுக்கம் பேணுதல், யாவருக்கும் எந்த நிலையிலும் பொதுவானது” எனக் கருதுக! ஏனென்றால், அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்!.1
2. இளமைப் பருவத்தில் ஒரு முன்மாதிரியான சிறுவனாக..

1. من مشكلات الشباب وكيف عالجها الاسلام – صالح بن فوزان الفوزان

இளைஞனாக முன்மாதிரியான பெருந்தகையாகத் திகழ்ந்திடுக!

3. சில இடங்களில், சில மனிதர்கள், சதித்திட்டம் மற்றும் மனக்கவலைகளுக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு யூஸுப்(அலை) அவர்களின் சரிதையில் மனஅமைதி கிடைக்கும்.!

4. எப்பொழுதுமே, நீங்கள் தீயவராக, இருந்தால்தான் உங்களுக்குத் தீயது நடக்கும் என்பது கட்டாயமன்று; நீங்கள் நல்லவராக இருப்பதாலும் கூட, முன்னால் இருப்பவர், உங்கள் மீது பொறாமை கொள்ளலாம்! எனவே பொறாமை மற்றும் சதித்திட்டங்களுக்கு ஆளாகும் வேளையில், கவலையைப் பெருக்கி, அதில் சிக்கிக் கொள்ளலாகாது, நபி யூஸுபு (அலை) அவர்களின் வழிமுறையின்படி, அதனை அல்லாஹ்விடம் ஒப்படைக்கக் கற்றுக் கொள்வோமாக!

5. பொறாமை, நல்ல குடும்பத்தைச் சார்ந்த எவரையும், எப்பொழுது வேண்டுமானாலும் சீண்டலாம்.. எனவே இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் 'ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு வகையில் பொறாமை, சிறிய அளவிலேனும் தீண்டுகிறது..' என்றார்கள். الشـــــــــريف يخفيها والئيم يبديها 'கண்ணியவான் தன் பொறாமையை மறைக்கவும் அதனை அழிக்கவும் முயற்சிக்கிறார்; தீயவனோ, அதனை வெளிப்படுத்துவதோடு, தீங்கிழைக்கவும் செய்கிறான்'

6. இளைஞர்கள், தீமையைக் கைவிட்டால், கிடைக்கப் போவது: அதிகாரம், அர்ஷின் நிழல், உன்னதமான பதவிகள் மற்றும் சுவனத்திலும் சிறப்போ சிறப்பு ஆகும். தீமையில் உழன்றதால் தகுதி மிக்க இளைஞர்கள் கூட, சீரழிந்துள்ளார்கள்..!

7. மூன்று வழிகளில் யூஸுப் (அலை) அவர்களின் தூய்மை நிரூபணமாகியுள்ளது:

♣ 1-அல்லாஹ்வின் அறிவிப்பு::

وَلَقَدْ هَمَّتْ بِهِۦ وَهَمَّ بِهَا لَوْلَآ أَن رَّءَا بُرْهَٰنَ رَبِّهِۦ كَذَٰلِكَ لِنَصْرِفَ عَنْهُ ٱلسُّوٓءَ وَٱلْفَحْشَآءَ إِنَّهُۥ مِنْ عِبَادِنَا ٱلْمُخْلَصِينَ 12:24

12:24. ஆனால் அவளோ அவரைத் திடமாக விரும்பினாள் அவரும் தம் இறைவனின் ஆதாரத்தைக் கண்டிராவிட்டால் அவள் மீது விருப்பம் கொண்டே இருப்பார் இவ்வாறு நாம் அவரைவிட்டுத் தீமையையும் மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம் - ஏனெனில் நிச்சயமாக அவர் நம் தூய்மையான அடியார்களில் ஒருவராக இருந்தார்.

♣ 2- குடும்பத்தின் அங்கத்தினர் தந்த சான்று:

فَلَمَّا رَءَا قَمِيصَهُۥ قُدَّ مِن دُبُرٍ قَالَ إِنَّهُۥ مِن كَيْدِكُنَّ إِنَّ كَيْدَكُنَّ عَظِيمٌ 12:28

12:28. (யூஸுஃபுடைய) சட்டை பின்புறமாகக் கிழிந்திருந்ததை அவர் கண்டபோது, நிச்சயமாக இது (பெண்களாகிய) உங்கள் சதியேயாகும் - நிச்சயமாக உங்களுடைய சதி மகத்தானதே!

♣ 3- இட்டுக்கட்டியவரே தவறை ஒத்துக் கொண்டு, அவர்கள் தூயவர் எனப் பகர்தல்:

12:32 قَالَتْ فَذَٰلِكُنَّ الَّذِي لُمْتُنَّنِي فِيهِ ۖ وَلَقَدْ رَاوَدتُّهُ عَن نَّفْسِهِ فَاسْتَعْصَمَ ۖ وَلَئِن لَّمْ يَفْعَلْ مَا آمُرُهُ لَيُسْجَنَنَّ وَلَيَكُونًا مِّنَ الصَّاغِرِينَ

12:32. அதற்கவள் “நீங்கள் எவர் சம்பந்தமாக என்னை நிந்தித்தீர்களோ, அவர்தாம் இவர் நிச்சயமாக நான் அவரை என் விருப்பத்திற்கு இணங்கும்படி வற்புறுத்தினேன் - ஆனால் அவர் (மன உறுதியுடன்) தம்மைக் காத்துக் கொண்டார். இனியும் அவர் நான் இடும் கட்டளைக்கிணங்கி நடந்து கொள்ளாவிட்டால் சிறையில் தள்ளப்படுவார் மேலும் அவர் சிறுமை அடைந்தவர்களில் ஒருவராகவும் ஆகிவிடுவார்” என்று சொன்னாள்

12:51 قَالَ مَا خَطْبُكُنَّ إِذْ رَاوَدتُّنَّ يُوسُفَ عَن نَّفْسِهِ ۚ قُلْنَ حَاشَ لِلَّهِ مَا عَلِمْنَا عَلَيْهِ مِن سُوءٍ ۚ قَالَتِ امْرَأَتُ الْعَزِيزِ الْآنَ حَصْحَصَ الْحَقُّ أَنَا رَاوَدتُّهُ عَن نَّفْسِهِ وَإِنَّهُ لَمِنَ الصَّادِقِينَ

12:51. (இவ்விவரம் அறிந்த அரசர் அப் பெண்களை அழைத்து) “நீங்கள் யூஸுஃபை உங்கள் விருப்பத்திற்கு இணங்குமாறு அழைத்தபோது உங்களுக்கு நேர்ந்தது என்ன?” என்று கேட்டார் (அதற்கு) அப் பெண்கள், “அல்லாஹ் எங்களை காப்பானாக! நாங்கள் அவரிடத்தில் யாதொரு கெடுதியையும் அறியவில்லை” என்று கூறினார்கள் அஜீஸுடைய மனைவி, “இப்பொழுது (எல்லோருக்கும்) உண்மை வெளிப்பட்டு விட்டது. நான் தான் இவரை என் விருப்பத்திற்கு இணங்குமாறு வற்புறுத்தினேன். நிச்சயமாக அவர் உண்மையாளர்களில் உள்ளவர்” என்று கூறினாள்.

8. சிறைக்குச் செல்வோர் அனைவரும், குற்றவாளிகளே, என்பது அவசியமில்லை! பிரச்சினையின் ஆழம் தெரியாமல், எவரையும் குறித்து அவசர கதியில் முடிவெடுக்கக் கூடாது! இப்னு தைமியா (ரஹ்) மற்றும் அஷ்ஷைக் அல்பானீ (ரஹ்) ஆகியோர், சிறையில் இருந்தபோது, (அல்லாஹ்வைச் சாரந்திருக்கின்ற) யூஸுப் (அலை) அவர்களின் வழிமுறையை நிறைவேற்றினர்.

இந்தத் தன்மை கொண்டோரே.. உன்னத பதவி கண்டவராம்..!
வாதிட உண்மை இருந்தாலும்.. உரிய வாய்ப்பை இழந்தனராம்..!?

9. தூய ஈமான், எப்பொழுதும் மனிதனை கெட்டிக் காரணாக்கிட - அலட்சிய மனப்பாங்கை அகற்றிட - புறக்கணிப்பில் இருந்து விடுபடத் தூண்டுகிறது.

10. மாற்றுமதத்தவர்கள் வாழும் நாட்டில், மந்திரி பதவியைப் பெற்று, முஸ்லிம்கள் மற்றும் மனித குலப் பிரச்சினைகளுக்கும், கஷ்டங்களைக் குறைப்பதற்கும் பாடுபடுவது, ‘துன்பத்தைக் களைதல்’ என்கிற ரீதியில், யூஸுப் (அலை) அவர்களின் வழிமுறையாகும்.

11. الـر... அலிப் லாம் ரா என்கிற தனி எழுத்துக்கள் (حـروف المقطعات) திருக்குர்ஆனின் தனித்தன்மையைப் பறைசாற்றிட இடம்பெற்றுள்ளன.. அன்றாட பேச்சு வழக்கிலுள்ள வார்த்தை (எழுத்துக்) களாலேயே அரபு மொழிக்காரரர்கள் தோற்கடிக்கப் பட்டுள்ளார்கள்.
12. யஃகூப் (அலை) மற்றும் யூஸுப் (அலை) ஆகியோரும், அதிக அளவில் துன்பங்களைச் சந்தித்துச் சகித்துள்ளனர், எனக் கூறப்பட்டு, நபீ (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் வழங்கப்பட்டுள்ளது..!
13. எப்பொழுதுமே எழுதாத – எதையும் பார்த்துப் படிக்காத – முஹம்மத் (ஸல்) அவர்கள், எவரிடமும் செவியுறாமல், அல்லாஹ்விடமிருந்து சரித்திரங்களைத் தெரிவிக்கிறார்கள்.. இவ்வகையில், யூஸுப் (அலை) அத்தியாயமும் நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தை உறுதிப் படுத்துகிறது.
14. நபிமார்களின் கனவுகள், மறுக்கமுடியாத வகையில், உண்மையானவைகளாகத் திகழுகின்றன..! மார்க்கத்தில் அவைகளுக்குத் தனி இடம் உண்டு..!!
15. கனவிற்கு விளக்கமளிப்பது ஒரு கல்வி ஆகும். அக்கல்வியைப் பெறாதவர்கள், விளக்கம் சொல்வதைத் தவிர்த்திடுக!
16. அல்லாஹ் தன் அடியார்களில் ஒருவருக்கு, அருள்புரிந்தால், அவ்வடியாரின் குடும்பத்தினர் அனைவரும் பயனடைகிறார்கள். உதாரணமாக யஃகூப் (அலை) கனவிற்கு விளக்கம் சொன்னபோது இப்படிக் கூறுகிறார்கள்: ويتمّ نعمته عليك وعلى أل يعقوب" (12:06)
17. தீங்குகளில் இருந்து ஒதுங்கியிருத்தல் கட்டாயமானதாகும்! அப்படியென்றால், நஷ்டம் எற்படுத்துகின்ற காரியங்களை மறைப்பதும் அவசியமானதாகும். எனவே யஃகூப் (அலை) அவர்கள், யூஸுப் (அலை) கண்ட கனவை மறைக்க, அறிவுரை சொன்னார்கள்!
18. பாவங்களைத் தவிர்தல் அவசியமாகும். ஏனெனில் ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு வழிகோலும்.. உதாரணமாக: யூஸுப் (அலை) அவர்களைச், சகோதரர்கள் உலகத்தில் இருந்து அப்புறப்படுத்த விரும்பினர்.. அதற்காக சூழ்ச்சிகள் செய்தனர்.. துணைக்குப் பொய்யை அழைத்தனர்..!
19. இணைவைப்பிற்குப் பின், பெரும்பாவங்களில் தலையாயது கொலை செய்வதாகும்.!
20. ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் இருக்கின்ற போது, சந்தேகம் கொள்ளலாகாது.. இருப்பினும், அவ்வாறு சந்தேகம் வருவது, ஹராமன்று..!
21. முஸ்லிம்களுக்குச் சோதனைகளும் துயரங்களும் வரும்போது, யஃகூப் (அலை) பொறுத்துக் கொண்டது போல், பொறுமையுடன் சகித்துக் கொள்ளவேண்டும்.

22. (ஆரம்பத்திலேயே) இயல்பாக பொறுமை காப்பது, (பிறகு) நிர்ப்பந்த நிலையில் பொறுமையாக இருப்பதை விட, அதிக நன்மையைப் பெற்றுத் தரும்; அவ்வாறே யூஸுஃப் (அலை) சந்தித்த சோதனை அவர்களின் பொறுமையை அதிகம் சோதிப்பதாக இருந்தது..!

23. கஷ்டம் வருகின்ற வேளையில், பொறுமை காட்டும் முஸ்லிமுடன் அல்லாஹ் இருக்கின்றான்.

24. ஒருவர் மனமார ஈமான் - விசுவாசம் கொண்டு, தனது பணிகள் அனைத்திலும், இக்லாஸ் - மனத்தூய்மையுடன் நடந்து கொண்டால், அல்லாஹ் அவரைப் பாதுகாக்கின்றான்..!

25. மானக்கேடானவை மற்றும் தடுக்கப்பட்டவைகளுக்கான காரணங்களை விட்டு விலகி நடப்பதே, தூய விசுவாசத்தின் விளக்கமாகும்..!

26. பெண்களின் சதியும், குழப்பமும், மிகவும் அபாயகரமானதாகும்; இதன் முன்னிலையில் ஷைத்தானின் சதித்திட்டம் பலம் குன்றியதாகத் தீர்மானிக்கப்படுகிறது!

27. கல்வியும் அறிவும் மனிதனை நன்மையின்பால் அழைக்கிறது; தீமையைத் தடுக்கிறது..! அறியாமையோ, மனிதனை அவனுடைய மனோ இச்சையின்படி நடக்கத் தூண்டுகிறது..!

28. ஒருவர், அல்லாஹ்வால் சோதிக்கப்படும் வேளையில் பொறுமை காத்தால், அல்லாஹ் அவரது கஷ்டத்தைப் போக்க, வழிகாட்டுவான். எடுத்துக்காட்டாக – யூஸுஃப் (அலை) அவர்களை சிறைச்சாலையில் இருந்து, வெளியேற்ற அல்லாஹ் நாடிய போது, யூஸுஃப் (அலை) அவர்களிடத்தில், விளக்கமும் தீர்வும் இருந்த ஒரு கனவை, அரசருக்குக் காட்டுகிறான்.

29. நெருக்கடி மற்றும் கஷ்ட காலத்தில், உதவிடும் நிலையில் உள்ளோரிடம், உதவியைக் கேட்டுப் பெறலாம்.. இருப்பினும் இவ்வாறு காரணங்களை நாடும்போது, அல்லாஹ்வை மறக்கலாகாது..!

30. ஒருவரிடம் உதவி கேட்கப்பட்டால், அவர் பயனுள்ள விஷயத்தின்பால் வழிகாட்டுவாராக!

31. . ஒரு மனிதர், யூஸுஃப் (அலை) அவர்கள் செய்ததைப் போல், தன்னுள் இருக்கின்ற, கல்விப் புலமையை வெளிப்படுத்தலாம்..!

32. பஞ்சத்தை அஞ்சுகின்றபோது, மக்களின் வருங்கால நலன் கருதி, உணவை இருப்பு (stock) வைக்கலாம்! ஆனால் எதிர்காலத்தில் கொள்ளை இலாபம் பெற்றிட – மக்கள் சிரமப்படுகின்ற நிலையில், உணவைப் பதுக்கி வைப்பது, கூடாது..!

33. ஒரு முஸ்லிம், தன்னிடம் மட்டும் ஒரு பணியைச் செய்வதற்கான

தகுதியையும், திறமையையும் கொண்டிருந்தால், மக்களுக்குத் தொண்டு செய்திடவும், நல்வழி காட்டவும், அப்பணி மற்றும் பதவியை, கேட்டுப் பெறலாம்..!

34. விருந்தினரை உபசரிப்பது, நபிமார்களின் வழிமுறையாகும்; மார்க்கத்தில் ஏவப்பட்டதாகும்!

35. உறுதியாகத் தெரிந்தவைகளில் மட்டுமே சாட்சி, சொல்லவேண்டும்; இல்லையேல் சாட்சி கூறக்கூடாது!

36. துயரமான நேரங்களில், அல்லாஹ்விடம் முறையிடுவது, பொறுமைக்கு எதிரானதன்று; படைப்புகளிடம், முறையீடு செய்வதே.. பொறுமைக்கு எதிரான நிலைபாடாகும்..!

37. ஒவ்வொரு கஷ்டத்திற்குப் பின்பும், இலேசு இருக்கின்றது..!

38. யூஸுஃப் (அலை) அவர்களிடத்தில் சகோதரர்கள், தம் பிரச்சினைகளை எடுத்துரைத்தது போல்,, ,ஒரு மனிதன் சில சமயம் தன் கஷ்டங்களை எடுத்துச் சொல்லலாம்.

39. மற்றவர்களோ்டு தொடர்புகளை மேற்கொள்ளும்போது, ஒப்பந்தங்களைப் போட்டுக் கொள்ளவேண்டும்.

40. ஆதாரமில்லா செய்திகளை, நம்புவது சரியன்று..!

41. யூஸுஃப் (அலை), (சகோதரர்களின்) திருட்டு குறித்த, பேச்சுக்கு, பிறகு பதில் தந்ததைப்போல், சில வார்த்தைகள் மற்றும் செயல்களுக்கு முன்யோசனையின் பேரில் தாமதமாகப் பதில் தரலாம்..!

42. எப்போது உலகம் சார்ந்த காரணங்கள், கைமீறிப் போகின்றனவோ.. அப்போதும், அடியார்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். யஃகூப் (அலை) அவர்கள் இப்படித்தான் நடந்து கொண்டார்கள்.

43. சக்தி மிக்கவராக இருக்கும் நிலையில், பிறரை மன்னிப்பது, சிறப்பு மிக்க நற்பண்பும், ஈமானின் அம்சமுமாகும்.!

44. விருப்பமில்லாத ஆரம்பத்தில், படிப்பினை கிடைக்காது; முடிவில்தான் படிப்பினை கிடைக்கும்.

45. ஈமான் கொண்ட நிலையில் மரணிப்பதற்காக, யூஸுஃப் (அலை) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். இவ்வாறு ஒரு முஸ்லிம் ‘துஆ’ செய்திடுக!

46. யூஸுஃப்(அலை) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த நுட்பங்களை, நேரில் பார்த்தவரே தெளிவு படுத்த இயலும்.. இவைபற்றி நபி (முஹம்மத் (ஸல்) அவர்கள் விளக்குவதன் மூலம், அவர்களது (நபித்துவத்தின்) உண்மைத் தன்மைக்கு ஆதாரம், கிடைக்கின்றது..!

47. அல்லாஹ்வின்பால் அழைப்பது, ஒரு முஃமின் மீது கடமையாகும். இன்னும் இதுவே நபி (ஸல்) அவர்களின்

வழிமுறையுமாகும்.

48. பெருமானார் (ஸல்)அவர்கள தன் சமூகத்தினரை இஸலாத்தின்பால் அழைப்பதில் பேராசை கொண்டிருந்தார்கள்! அவ்வாறே ஒரு இறை அழைப்பாளன், மக்கள் நேர்வழி பெறுவதில் பேராசை கொள்க!

49. (படைத்தவனின்) உதவியைப் பெற்றிட அவசரம் காட்டுவது, அனுமதிக்கப்பட்டதன்று..! அல்லாஹ் சோதித்துப் பார்க்கலாம்.!!

50. ஓர் இறைத்தூதர் தான் பொய்ப்பிக்கப்படுவதாகக் கருதி, மனமுடைகின்ற வேளையில், அல்லாஹ்வின் உதவி அவர்களை வந்தடைகிறது..!

51. முந்தைய மக்களின் சரித்திரங்களால், மனஅமைதி கிடைக்கும்! எனவே அழைப்பாளர்கள் திருக்குர்ஆனை, அடிக்கடி அதிகம் ஓதிடுக!! அதிலே படிப்பினை – அறிவுரை – நேர்வழி இருக்கின்றன.

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

❖ ஸூரா ஹூத் மற்றும் ஸூரா யூஸுப் இரண்டுமே நபி (ஸல்) அவர்களின் மன அமைதிக்காக அருளப்பட்டன.! இரண்டு அத்தியாயங்களுமே ஒரே நேரத்தில் அருளப்பட்டவையே!

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

يَا صَاحِبَيِ السِّجْنِ أَأَرْبَابٌ مُّتَفَرِّقُونَ خَيْرٌ أَمِ اللَّهُ الْوَاحِدُ الْقَهَّارُ 12:39

12:39. “சிறையிலிருக்கும் என் இரு தோழர்களே! வெவ்வேறான பல தெய்வங்கள் இருப்பது நல்லதா? அல்லது (யாவரையும்) அடக்கி ஆள்கின்ற ஒருவனான அல்லாஹ்வா?

مَا تَعْبُدُونَ مِن دُونِهِ إِلَّا أَسْمَاءً سَمَّيْتُمُوهَا أَنتُمْ وَآبَاؤُكُم مَّا أَنزَلَ اللَّهُ بِهَا مِن سُلْطَانٍ ۚ إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ ۚ أَمَرَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ ۚ ذَٰلِكَ الدِّينُ الْقَيِّمُ وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ 12:40

12:40. "அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை யாவும் நீங்கள் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை அவற்றுக்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவர்க்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கின்றான். இதுவே நேரான மார்க்கமாகும் ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை.

قَالَ لَا تَثْرِيبَ عَلَيْكُمُ الْيَوْمَ ۖ يَغْفِرُ اللَّهُ لَكُمْ ۖ وَهُوَ أَرْحَمُ الرَّاحِمِينَ 12:92

12:92. அதற்கவர், "இன்று உங்கள் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் இல்லை அல்லாஹ் உங்களை மன்னித்தருள்வானாக! அவனே கிருபையாளர்களிலெல்லாம் மிக்க கிருபையாளனாக இருக்கின்றான்" என்று கூறினார்.

## அல்ஹதீஸ்

அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) கூறினார்கள்: ''தனது அர்ஷின் நிழலைத் தவிர, வேறு நிழல் இல்லாத மறுமை நாளில், அல்லாஹ் ஏழு வகையான நபர்களுக்கு, தன் அர்ஷின் கீழ் நிழல் தருவான். நீதி மிக்க அரசன், அல்லாஹ்வை வணங்கிய நிலையில் வாலிபத்தைக் கண்ட இளைஞன், தனிமையிலே அல்லாஹ்வை நினைத்துக் கண்ணீர் சிந்திய மனிதன், எவருடைய உள்ளம் பள்ளிவாசலுடன் தொடர்போடு இருக்குமோ அந்த மனிதர், அல்லாஹ்விற்காக அன்பு செலுத்துகின்ற இருவர், அழகும் அந்தஸ்தும் கொண்ட ஒரு பெண், அழைக்கின்றபோது, 'நிச்சயமாக நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன்' எனக் கூறுகின்ற ஒருவர், இடக்கை அறியாத நிலையில், வலக் கையால் தர்மம் செய்கிறவர் ' (அல் புகாரீ: 6806)

# سُوْرَةُ الرَّعْدِ

# ஸூரா
# அர் - ர.்.து

13

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

# சில நோக்கங்கள்
## *Few Objectives*

- சத்தியத்தின் பலமும், அசத்தியத்தின் இயலாமையும் இவ்வத்தியாயத்தில், விளக்கப்படுகிறது.
- இந்தத் திருக்குர்ஆன், போதுமான அளவில் தாக்கத்தைத் தருகிறது; மனிதர்களிடம் மட்டுமில்லை! பூமி, மலை, மற்றும் வானத்திலும் இதன் தாக்கம் உண்டாகிறது, என எடுத்துக் காட்டப்படுகிறது. (வசனம்: 31)
- இவ் வத்தியாயம், உலக ரீதியாக, அதீத முன்னேற்றம் (Intellectual) கண்டவர்களுக்கு, அறிவார்ந்த சான்றுகளைத் (Reasoning approach) தந்து, ஆதாரத்தை நிலைநாட்டுகிறது; எதிர்க்க வரும் சான்றுகள் அனைத்தையும், இந்த 'ஸூரா' தகர்த்து விடுகிறது.
- முன்னாள் நியூட்டன், (அரபுக் கவிஞர் இம்ரவுல் கைஸ்) இயற்கைக் காட்சிகளில் மனதைப் பறிகொடுத்து, - அவைகளில் லயித்துச்-சிந்தித்துப் புகழ்ந்துரைக்கிறார்! நவீன இம்ரவுல் கைஸ் (நியூட்டனு) க்கும் அவருக்கும் இடையில், உள்ள ஒரு ஒற்றுமை இதோ! 'இவர்களின் பார்வைகள், படைப்புகளின் தனித்தன்மைகள் வரை மட்டும்தான் செல்கின்றன; ஆய்வு (discovery) செய்கின்றன!! (தொடர்ந்து படைத்தவனின் பால் செல்லாமல்) முடங்கிவிடுகின்றன.. குதிரையைப் பற்றிய நுட்பமான வர்ணனையாக இருக்கட்டும்; கீழே விழுந்த ஆப்பிளால் கண்டுபிடிக்கப்பட்ட, (gravity) புவி ஈர்ப்பு விசை பற்றிய, விஷயமாக இருக்கட்டும்.. இருவரின் பார்வையுமே குறையுடையதாகத்தான் உள்ளது..! திகைக்க வைக்கின்ற இயற்கைத் தன்மைகள் (அவர்களுக்குள்) தாக்கத்தை ஏற்படுத்துகின்றன! கண்டுபிடிப்பைத் தருகின்றன!! ஆனால் அவர்கள், அப்படைப்புகள் மூலம், படைத்தவனை அறிய முடியாமல் ஆகிவிட்டதே! ஏன்?! படைத்தவனை ஏற்க முடியாமல்... வணக்கத்திற்குரியவனைச் சென்றடைய முடியாமல் போனதும் ஏனோ? இதுவும் ஒரு வினோதம்தான்!
- மனிதன் கண்ணுக்குத் தெரிகின்ற ஆப்பிள் மூலம், கண்ணுக்குப் புலப்படாத புவிஈர்ப்பு விசையைக் கண்டுகொள்கிறான் எனில், ஆப்பிளின் இடத்தில், அண்ட சராசரங்களை வைத்துச் சிந்திக்கக் கூடாதா!? இதன் மூலம் அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள இயலாதா?!

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. திருக்குர்ஆனின் தன்மைகளும், அழகிய சரிதை இடம் பெற்று இருப்பதன் விபரமும்..! (1-3)
2. மீண்டும் மறுமையில் எழுப்பப்படுவதை, இணை வைப்பாளர்கள் மறுத்ததும், அதற்கான ஆதாரங்களை வினவுவதும். (5-7)
3. அல்லாஹ்வின் அறிவும், அவனது வல்லமையும். (8-16)
4. சத்தியம், சத்திய வாதிகள் மற்றும் அசத்தியம், அசத்திய வாதிகளுக்கான உதாரணங்கள்! (17)
5. மு.ஃ.மின்கள் மற்றும் காபிர்களுக்கான தங்குமிடம் (18)
6. மு.ஃ.மின்களின் தன்மைகளும் அவர்களுக்குக் கிடைக்கின்ற கூலியும்... (19-24)
7. காபிர்களின் தன்மைகளும் அவர்கள் பெறப்போகும் தண்டனை விபரமும். (25)
8. ஆதாரம் குறித்த - குப்பார்களின், குறும்புத்தனமான கேள்விகளுக்கு.., உணவும், நேர்வழியும் அல்லாஹ்வின் வசம் உள்ளவையே எனப் பதில் தரப்படுகிறது..! (26-28)
9. மு.ஃ.மின்களின் தங்குமிடம் பற்றிய விபரம்! (29)
10. நபிமார்கள் கண்ட இயக்கம், மற்றும் திருக்குர்ஆனின் முக்கியத்துவம் (30)
11. அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பொய்ப்பித்த காபிர்கள்.(31-34)
12. சுவனத்தின் தன்மைகள், இறையச்சம் உடையவர்கள் மற்றும் காபிர்களுக்கு ஏற்படும் முடிவுகளின் விபரத்துடன் இறைத்தூதர் (அல்லாஹ்வால்) எச்சரிக்கப்படுதல்..! (35-37)
13. நபி மார்களின் தன்மை மற்றும் திருக்குர்ஆன் நிலைத்து நிற்பதன் விபரம் (38-39)
14. இறைத் தூதருக்கு மன அமைதியைத் தருதல், இணைவைப்பாளர்களின் நடவடிக்கைகளில் கவனமாக இருத்தல். (40-43)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. திருக்குர்ஆன் ஒரு சாதாரணமான நூல் அல்ல; அதனுடன் எவரும் போட்டியிட இயலாது; இதன் மூலமே வெற்றி வசப்படுத்தப்படும்..!

2. அசத்தியவாதிகள், எவ்வளவுதான் முயற்சித்தாலும், சத்தியமே ஜெயிக்கும்..!
3. தன் இறைவனைச் சந்திப்பதில், மனிதன் உறுதியுடன் இருக்கவேண்டும்..!
4. மக்கள், ஒரே சமுதாயமாக இருந்தனர்; இருப்பினும் கருத்து வேறுபாடு கொண்டனர்; குழுக்களாகப் பிரிந்தனர் - இப்பொழுது அவர்களில் அதிகமானோர், மு..மின்களாக இல்லை.!
5. மனிதன் தனது 'ரப்பி'டமிருந்து நேர்வழியைப், பெற்றிடத் தேவையுடையவனாக இருக்கிறான்!
6. மனிதன், தன்னுடைய அறிவு மற்றும் புலன்களால், நல்லதையும், தீயதையும், பகுத்துணர முடியும்; அவ்வாறே படைப்புகளில் உள்ள, சான்றுகளின் மூலமாக, அல்லாஹ் இருக்கின்றான் என்பதையும், அவனால் அறிந்து கொள்ள இயலும்..!
7. முன் சென்ற சமுதாயத்தினருக்கு நிகழ்ந்த அழிவிலிருந்து, படிப்பினை பெற்றிட வலியுறுத்தப் படுகிறது. அழைப்புப் பணியில் முயற்சியுடன் ஈடுபடுமாறும், சொல்லப்படுகிறது.!
8. முஷ்ரிக்குகள், மு..ஜிஸா – அற்புதம் நிகழ்த்த, கோரிக்கை வைத்தபோதும் கூட, அல்லாஹ், அவர்களின் அநியாயத்தின் காரணத்தால், அதனை வழங்கவில்லை..!
9. நபிமார்கள் அனைவரின் (அடிப்படையான) அழைப்பும் ஒன்றே! அது தவ்ஹீத் என்கிற - ஏகத்துவமே!!
10. தண்ணீரை ஆவியாக்கி மேலே கொண்டு செல்வதிலே, காற்று முக்கிய பங்கு வகிக்கிறது.!
11. 'துஆ', அச்சம், நம்பிக்கை, பயம் ஆகிய யாவும், அல்லாஹ்விற்காகவே மட்டும் அமைய வேண்டும். ஏனென்றால் உயிர் தருபவனும், உயிரை எடுப்பவனும், அவனே! உணவளிப்பவனும், உரிமையாளனும் அவனே!!
12. அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்திற்கு, சத்திய அழைப்பு எனப் பெயர் வைத்தான்; மழையுடன் ஒப்பிட்டான். ஏனென்றால் , அது விண்ணில் இருந்து இறங்குகிறது .. நதிகளில் பெருக்கெடுத்தோடுகிறது.. பின் மக்கள் பயனடைகிறார்கள்!
13. அல்லாஹ், மு..மினின் உள்ளத்தை, தண்ணீரைத் தேக்கி வைத்துப் பயனடைகின்ற, பசுமையான பள்ளத்தாக்கோடு ஒப்பிடுகின்றான்.
14. பொறுமையைக் கட்டாயமாகக் கடைபிடிக்கவேண்டிய விபரம் தரப்படுகிறது..! அதாவது சோதனையான வேளைகளில், கண்டிப்பாக 'விதி' யைப் பொருந்திக் கொள்ளவேண்டும்..!!:
15. சோதனையான கட்டங்களில், துயரமான வேளைகளில், பொறுமை காட்டும் மக்களில், பல வகையினர் உண்டு:-

- எந்த ஒரு கஷ்டத்தையும் சந்திக்க இயலாமல், சக்தியற்று நிற்கிறவர்கள்..!
- உலகில் தோன்றும் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு, நடுநிலைப் போக்குடன் வாழ்கிறவர்கள்..!
- உலகில் தோன்றும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதோடு, உறுதி குலையாமல் பேராடுகின்ற மனப்பாங்குடன் வாழ்கிறவர்கள்..! இவர்கள் கொள்கை மற்றும் விசுவாசத்தில் உறுதி மிக்கவர்களாய், இறையச்சமுள்ள வாழ்க்கையை, மேற்கொள்கிறவர்களாய் இருப்பார்கள்..!!

16. பொறுமை காப்போரின் பொறுமைக்கும் காரணங்கள் பல உள்ளன:-
    - பொறுமையாக இருப்பதில் முன்மாதிரியாகத் திகழ்ந்திட
    - பலஹீனமானவர்! என மக்கள் குறை கூறாமல் இருக்க
    - எதிரிகளின் ஏளனச் சிரிப்பைத் தவிர்த்திட
    - ‘கவலை கொள்வதில் பயனில்லை’ என விளங்கி..
    - அல்லாஹ் வகுத்துள்ள, ‘விதி’ யைப் பொருந்தி ஏற்று..
17. உணவு அல்லாஹ்வின் கையிலுள்ளதாகும்; எனவே அடியார்கள், அல்லாஹ்வைச் சார்ந்திருக்க வேண்டும்; அவன் தன் ஞானத்தின் அடிப்படையில், உணவை வழங்குகிறான்.
18. மு.ஃ.ஜிஸாத் - அத்தாட்சிகள் - தண்டனைகளுக்கான காலம் அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவை அல்லாஹ்வுடைய ஞானத்தின்படி வழங்கப்படுகின்றன.
19. அழைப்புப் பணி மற்றும் அதனை உறுதியோடு தொடர்வதன், அவசியம் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது.

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

- ஸூரா ‘யூஸுபில்’ சரித்திரச் சான்றுகள் மூலம், சத்தியம் நிரூபிக்கப் பட்டு, அசத்தியம் நிர்மூலமாக்கப்படுகிறது.! ‘அர்-ர.ஃ.து’ அத்தியாயமோ, அறிவுப்பூர்வமான மற்றும் இயற்கைக் காட்சிகளில் வெளிப்படுகின்ற, ஆதாரங்கள் மூலம், சத்தியத்தை ஒளிரச் செய்கிறது; அசத்தியத்தின் அஸ்திவாரத்தைத், தகர்த்தெறிகிறது..!
- மக்காவில், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையே, உச்சகட்டப் (Peak) போராட்டம், நடந்து கொண்டிருந்தபோது – ஆட்சேபனைகள் மூலம் நபித்துவத்தின் உண்மைத் தன்மைக்கு, சவால் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதுதான், ‘யூஸுப்’ மற்றும் ‘அர்-ர.ஃ.து’ அத்தியாயங்கள் இரண்டும் அருளப்பட்டன.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

اللَّهُ يَعْلَمُ مَا تَحْمِلُ كُلُّ أُنثَىٰ وَمَا تَغِيضُ الْأَرْحَامُ وَمَا تَزْدَادُ ۖ وَكُلُّ شَيْءٍ عِندَهُ بِمِقْدَارٍ 13:8

13:8. ஒவ்வொரு பெண்ணும் (கர்ப்பத்தில்) சுமந்து கொண்டிருப்பதையும், கர்ப்பப்பைகள் சுருங்கி குறைவதையும், அவை விரிந்து அதிகரிப்பதையும் அல்லாஹ் நன்கறிவான் ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடம் அளவு இருக்கின்றது.

وَلَوْ أَنَّ قُرْآنًا سُيِّرَتْ بِهِ الْجِبَالُ أَوْ قُطِّعَتْ بِهِ الْأَرْضُ أَوْ كُلِّمَ بِهِ الْمَوْتَىٰ ۗ بَل لِّلَّهِ الْأَمْرُ جَمِيعًا ۗ 13:31
أَفَلَمْ يَيْأَسِ الَّذِينَ آمَنُوا أَن لَّوْ يَشَاءُ اللَّهُ لَهَدَى النَّاسَ جَمِيعًا ۗ وَلَا يَزَالُ الَّذِينَ كَفَرُوا تُصِيبُهُم
بِمَا صَنَعُوا قَارِعَةٌ أَوْ تَحُلُّ قَرِيبًا مِّن دَارِهِمْ حَتَّىٰ يَأْتِيَ وَعْدُ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ لَا يُخْلِفُ الْمِيعَادَ

13:31. நிச்சயமாக குர்ஆன் - அதனைக் கொண்டு மலைகளை நகரும்படிச் செய்தாலும், அல்லது அதனைக் கொண்டு பூமியைத் துண்டு துண்டாக்கினாலும், அல்லது அதனைக் கொண்டு இறந்தவர்கள் பேசும்படிச் செய்யப்பட்டாலும் (கா∴பிர்கள் விசுவாசங்கொள்ளவே மாட்டார்கள்), ஆயினும் எல்லாக்காரியங்களும் அல்லாஹ்வுக்கே உரியன் ஆகவே, அல்லாஹ் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவருக்கும் நேர்வழி காட்டியிருப்பான் என்பதை ஈமான் கொண்டவர்கள் அறியவில்லையா? நிராகரிப்போரை, அவர்கள் செய்து கொண்டிருக்கும் (தீச்) செயல்கள் காரணமாக ஏதேனும் ஒரு கேடு வந்தடைந்து கொண்டேயிருக்கும், அல்லது அவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சமீபமாகவேனும், (அக்கேடு) சம்பவித்து, (உங்கள் வெற்றி குறித்து) அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியே தீரும் - நிச்சயமாக அல்லாஹ் (தன்) வாக்குறுதியில் மாறுசெய்யமாட்டான்.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) கூறினார்கள்: ''திருக்குர்ஆனைத் திறம்பட ஓதுகிறவர்கள், சங்கைக்குரிய–கண்ணியத்ததிற்குரிய – வானவர்களுடன் வீற்றிருப்பர். யார் திக்கித்திணறி – சிரமத்தோடு ஓதுவாரோ, அவருக்கு இரட்டைக் கூலி, கிடைக்கும்'' . (அறிவிப்பாளர்: ஆயிஷஹ் (ரலி); ஸஹீஹ் முஸ்லிம் - 798)

நபி (ஸல்) கூறினார்கள்: ''திருக்குர்ஆனை ஓதுங்கள்! மறுமை நாளில் இது, தன்னைப் படித்தோருக்கு சிபாரிசு செய்யக் கூடியதாக வரும். (அறிவிப்பாளர்: அபூ உமாமஹ் (ரலி); ஸஹீஹ் முஸ்லிம் - 804)

# سُوْرَةُ اِبْرَاهِيْمَ

# ஸூரா இப்ராஹீம்
# (அலை)

14

இது 'மக்கீ'
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ ஈமான் - இறை நம்பிக்கை, ஓர் அருட்கொடை! ‘குப்ரு’ - இறை நிராகரிப்பு, ஒரு சாபக்கேடு!! என இவ்வத்தியாயத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது.
- ❖ இவ்வுலகத்தின் பகட்டான வாழ்க்கையே எல்லாம்! எனச் சிலர் எண்ணுகின்றனர்; அதையே மிகப்பெரிய பாக்கியமாகக் கருதுகின்றனர்.. ஆனால் ‘ஈமான்’.., வாழ்க்கையின் அரிய பாக்கியம் என இவ்வத்தியாயம் பேசுகிறது! (வசனம்: 24)
- ❖ இவ்வத்தியாயத்தில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகங்கள் நினைவு கூறப்படுகின்றன; அவர்கள் தன் குடும்பத்தை, பசுமையே இல்லாத பள்ளத்தாக்கில் - பாலைவனப் பூமியில், அல்லாஹ்விற்காக மட்டுமே, விட்டுவந்தார்கள்..!
- ❖ பின்வரும் தலைப்புகள் இவ்வத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன: ஓரிறைக் கொள்கை (தவ்ஹீத்), தூதுத்துவம் (ரிஸாலத்), மரணத்திற்குப் பின் எழுப்பப்படுதல், மறுமை (கியாமத்), சுவனத்தின் அருட்கொடைகள், மற்றும் அழகிய முறையில் தர்க்கம் செய்தல்.
- ❖ குரைஷிக் காபிர்களிடம், நபி இப்றாஹீம் (அலை) அவர்களைப் போன்று, தூய ஏகத்துவத்தைக் கடைபிடிக்கக் கூறப்படுகிறது..!
- ❖ அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதற்கும், அவைகளை நிராகரிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, ஒப்பீடு செய்தல் மற்றும் அதன் முடிவுகள் - நி.்.மத்துக்களின் நிராகரிப்பிற்கு, உதாரணம், ‘இப்லீஸ்’ ஆவான். நபிமார்களே, அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவதில், மிக உன்னதமான முன்னுதாரணங்களாகத் திகழுகிறார்கள்.

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. திருக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து இறக்கியருளப்பட்டது; இதில், விசுவாசம் கொள்வோருக்கு. நேர்வழி இருக்கிறது! அத்துடன் காபிர்களுக்கு சவாலாகவும் திகழ்கிறது..!! (1-3)
2. நபிமார்களின் மொழியைப் பற்றிய குறிப்பும், அவர்களின் பணியைப் பற்றிய தெளிவும்..!(4)
3. நபி மூஸா (அலை) மற்றும் அவர்களின் சமுதாயம் குறித்த

விபரம்.!(5-8)
4. முந்தைய நபிமார்கள் மற்றும் அவர்களின் சமூகம் பற்றிய குறிப்புகள்..(9-17)
5. குப்பார்களின் செயல்பாடுகளுக்கான உதாரணங்கள். (18)
6. அனைத்துப் படைப்புகளின் படைப்பாளன், அல்லாஹ் மட்டுமே! (19 – 20)
7. பலஹீனமாக இருந்தோர் மற்றும் ஆணவத்துடன் நடந்தோர் இடையே, நரகில் நடைபெறவிருக்கின்ற உரையாடல். (21)
8. தன்னைப் பின்பற்றியோரை விட்டும், ஷைத்தான் விவகி – விடைபெறுதல்.! (22)
9. மு.்.மின்களின் வெற்றி பற்றிய விபரம். (23)
10. கலிமஹ் தையிபஹ் (சீரிய வாக்கியம்) மற்றும் கலிமஹ் கபீஸஹ் (தவறான கொள்கையின் வாக்கியம்) – உதாரணம்..! (24 - 27)
11. அல்லாஹ்வின் பாக்கியங்களில், நன்றி கொன்றவர்களும் அவர்கள் கண்ட முடிவும்.(28 - 30)
12. ஈமான் கொண்டவர்களுக்கு சில வழிகாட்டுதல்களும், மறுமையைக் குறித்து அவர்களை எச்சரிப்பதும்.! (28 - 30)
13. அல்லாஹ்வின் வல்லமைகளும். அவனுடைய அடியார்கள் மீது பொழியப்படுகின்ற அருட்கொடைகளும். (32-34)
14. இப்றாஹீம் (அலை) அவர்கள் தன் ‘ரப்பி’ டத்தில் உரையாடுதல் (35 – 41)
15. அநியாயக்காரர்களுக்கான எச்சரிக்கையும், மறுமையின் பயங்கரமும். (42- 52)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. நேர்வழி மற்றும் பேரொளியின் ஊற்றுக் கண்ணாக விளங்குகின்ற, திருக்குர்ஆனால் மட்டுமே.., இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு அழைத்து வர இயலும்.
2. இருளும் ஒளியும் சமமாகாது; ஈமான் கிடைப்பது, ஒரு பெரும்பேறு!
3. அல்லாஹு தஆலா திருக்குர்ஆனை, சர்வ தேச மொழியான அரபியில் - நேர்வழியைத் தேடிப் பெற, விளங்குவதற்கு எளிதான, அரபியில், - அருளியுள்ளான்.
4. உலகத்தைத் தேடுவது பழிக்கப்பட்டதன்று; ஆனால் அத்தேடல், மறுமையோடு போட்டியிட்டால், வழிகேட்டிற்கு இட்டுச் செல்லும்..!

5. (திருக்குர்ஆன் மற்றும் நபி வழியில் இல்லாத) பித்அத்தின் பால், அல்லது தடைசெய்யப்பட்ட சொற்கள் மற்றும் செயல்களின்பால், ஒருவர் அழைப்பு விடுத்தால், அத்தவறுகளைச் செய்வோருக்கான தண்டனையைப் போன்று, அவ்வழைப்பாளருக்கும் தண்டனை கிடைக்கும்.!
6. 'விதி' யின் மீது விசுவாசம் கொள்ளாமல், ஈமான் முழுமை பெறாது . எனவே அதற்காக அழைப்பு விடுக்கப்படுகிறது..!
7. நன்மையையும், தீமையையும் பிரித்தறிய. அல்லாஹ் பகுத்தறிவைத் தந்திருக்கிறான். எனவே (தவறிழைத்தவர்) விதியின் மீது பழி போட இயலாது!
8. மனிதன், அல்லாஹ்வின் 'ஷரீஅத்' சட்டத்தைப் பின்பற்றுக! அதுவே உரிய இடத்திற்குக் கொண்டு செல்கின்ற 'நேர்வழி' ஆகும். 'ஷரீஅத்' சட்டத்தைக் கைவிட்டு முகம் திருப்பிக் கொள்வது, 'வழிகேடு'ம் ஆகும்.
9. மனிதர்களை, வழிகேடுகளின் இருள்களில் இருந்து, படைத்தவனுடைய நேர்வழி எனும் ஒளியின்பால், அழைத்து வரவேண்டும். அதற்காக அழைப்புக் களத்தில், கல்வி, மென்மை, மற்றும் இனிய அணுகுமுறை ஆகியன தேவைப்படுகின்றன. அத்துடன் முன்னால் இருப்பவரின் அறிவு, மற்றும் சந்தர்ப்பங்களைக் கருத்தில் கொள்வதும், அவசியம் ஆகும்..!
10. நபிமார்கள் மற்றும் இரஸூல்மார்களின் பணி இதோ:- தம்முடைய 'ரப்பைக்' குறித்த சரியான கல்வியை வழங்குவது .. அவர்கள், ஷரீஅத்தின் அடிப்படையில், மக்களை நெறிப்படுத்துவது .. மேலும் 'தன் மார்க்கத்தை அவர்களிடம், அவர்களின் மொழியிலேயே, ஒப்படைத்துள்ளான்'.. என்கிற அல்லாஹ்வின் ஆதாரத்தை நிலை நாட்டுவது.. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்து, அவர்கள், இம்மார்க்கத்அல்லாஹதில் நிலவிடும் சீர்கேட்டைச் சீர்திருத்துவது.. மார்க்கம் மற்றும் அறிவு ரீதியாக, பக்குவப் படுத்திச் சீர்படுத்துவது..!
11. அரபி மொழியில், 'أيام' (அய்யாம்) ' நாட்கள்' என்பதன் கருத்து, முன் சென்ற சமுதாயத்தினர் மீது, இறக்கப்பட்ட வேதனை ஆகும்; எனவே அவைகளில் படிப்பினை பெறுக!
12. நன்றி காட்டுவதும், பொறுமை காப்பதும் - ஒரு மு.்.மினை, இறை வழியில் எதிர்ப்படுகின்ற, கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளத் தூண்டுகின்றன.!
13. இன்பம் மற்றும் துன்பத்தின் மூலம், சோதித்து மு.்.மின்களைத் தன் எதிரிகளிடமிருந்து, பிரித்தெடுப்பது, அல்லாஹ்வின் ஞானத்தில் உள்ளதாகும்.!
14. நபிமார்கள் அனைவரையும், ஒரே நோக்கத்தை நோக்கி

அழைப்பவர்களாய், அல்லாஹ் அனுப்பியதும் அவனுடைய ஞானத்தில் உள்ளதாகும்..!

15. மூஸா (அலை) அவர்கள் (குர்ஆனில்) மிக அதிகமாக நினைவு கூறப்பட்டுள்ளார்கள். காரணம் நாம் அவர்களின் பல்வேறுபட்ட நிலைமைகளில் இருந்து, படிப்பினை பெறுவதற்காக..!

16. குப்பார்கள் - முஷ்ரிக்குகள், அல்லாஹ் வழங்கிய அவகாசத்தால் தவறான முடிவுக்கு வந்தார்கள்; நபிமார்களை - இரஸூல்மார்களை வெளிப்படையாகவே மறுத்து விட்டார்கள்..!

17. இறைத்தூதர்களின் மனிதத்தன்மை குறித்து ஆச்சரியப்பட்டுக் கிண்டலும் செய்து கொண்டிருந்த காபிர்களின் நடவடிக்கைதான், நகைப்பிற்குரியதாகும்.. ஏனெனில் நபிமார்களைத் தேர்ந்தெடுப்பது, அல்லாஹு தஆலாவின் முழுமையான ஞானத்தின்பாற் பட்டதாகும்

18. நபிமார்களும் இரஸூல்மார்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட, ‘மு.ஃ.ஜிஸாத்’ எனும் அற்புதம் எதையும், அவர்கள் தாமாக நிகழ்த்திட இயலாது..!

19. இறைத்தூதர்களின் நபித்துவமும், அழைப்பும் ஒரேமாதிரியாகத்தான் இருந்தன! அவ்வாறு இல்லாவிட்டால், மக்கள் இருளிலும், தூரமான வழிகேட்டிலும் சென்றிருப்பர்!

20. சர்வாதிகாரமும், பூமியில் நானே பெரியவன் என்பதும், பழிக்கப்பட்டிருக்கிறது.. காரணம் இது அநீதமிழைப்பதற்கும், தீய விளைவுகளுக்கும் வழிவகுக்கும்.

21. நூஹ் (அலை) அவர்களின் சமுதாயம், ஆது கூட்டத்தினர், மற்றும் ஸமூது கூட்டத்தினர் ஆகியோரின் நிகழ்ச்சிகள், படிப்பினை பெறும் நோக்கில் தரப்படுகின்றன; அவர்கள் அல்லாஹ்வின் பரிசுகள் மற்றும் அவனுடைய திருச் செய்தியை. மறுத்துக் கொண்டிருந்தார்கள்.. இவ் வுலகத்திலேயே மூழ்கிவிட்டிருந்தார்கள்..!

22. ஒருவர், மு.ஃ.மினாக - உண்மை விசுவாசியாகத் திகழும்போது, அவர் மீது ஷைத்தானுக்கு எந்த ஆதிக்கமும், சக்தியும் இல்லை.

23. இரு வகையான உரையாடல்கள் பற்றி பேசப்படுகின்றன: 1) ஒரு சமூகம் தன் தலைவருடன் உரையாடுவது 2) ஷைத்தான் தன்னைப் பின்பற்றுவோருடன் உரையாடுவது…இரு வகையிலும், ஒவ்வொருவரும், தீமையை, அடுத்தவர்களுக்காக நன்மையென வழங்கிக் கொண்டிருந்தனர்.

24. ஒரு மு.ஃ.மின், தன்னிடமுள்ள பழுதற்ற இயல்பின் காரணத்தால், சத்தியத்தை ஏற்பதற்காக முந்துகிறார்; விசுவாசமற்றவன் இப்படி இருப்பதில்லை.

25. இந்த உலகம், மறுமையின் முன்னிலையில் காபிர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட காலம் வரை, பயனளிக்கின்ற ஒரு சாதனம்; பாக்கியம்

ஆகும். எந்த நிலையில், எந்த வடிவத்தில் அது இருப்பினும் சரியே!

26. உதாரணங்கள் தரப்படுவதற்கான சூட்சுமம், படிப்பினை பெறவைத்தல் மற்றும் அமல்களில் ஆர்வமூட்டுதல் ஆகியவை ஆகும்.
27. மேலதிக அருட்கொடைகளைப் பெற்றிட 'துஆ' செய்தல்; அதே சமயம், கிடைக்கப் பெற்ற பாக்கியங்களுக்காக நன்றி செலுத்துதல்..!
28. அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்திட, அழுத்தமான அழைப்பு விடுக்கப்படுகிறது..!
29. மக்களுக்குப் பயனளிக்கின்ற சூரியன் மற்றும் சந்திரனின் சுழற்சிகளில், அல்லாஹ்வின் மகத்தான ஞானம் இருக்கிறது.
30. அல்லாஹு தஆலா, தன் வல்லமையை, 'கல்க்' (படைத்தல்), "அல் இப்தா" (முன்மாதிரி இன்றிப் படைத்தல்), "பதர" (இயற்கையாகத் தோன்ற வைத்தல்) போன்ற பலவித வார்த்தைகளில், வெளிப்படுத்துகிறான்.
31. இப்றாஹீம் (அலை) 'நபிமார்களின் தந்தை' ; உலுல் அஜ்ம் - உறுதி மிக்க நபிமார்கள் ஐவரில் ஒருவர்.. அவர்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரம், மற்றும் சிலை வழிபாடுகளை, ஒன்றுமற்றதாகக் கருதினார்கள். அத்துடன் ஒரே அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்காக, பகிரங்க அழைப்பு விடுத்தார்கள்.
32. இறைக் கொள்கை, மற்றும் மார்க்க வழிமுறைகளில், எந்தவிதமான சமரசமும் கூடாது; மிக நெருங்கிய உறவினராக இருப்பினும் சரியே!
33. நபி இப்றாஹீம் (அலை), அவர்களின் அழைப்பை அகிலத்தின் மக்கள் அனைவரிடமும், கொண்டு செல்ல, அல்லாஹ், தன் ஞானத்தின்படி, முஹம்மத் (ஸல்) அவர்ளை, மக்கள் யாவருக்காகவும், நபியாக ஆக்கினான்; மக்காவை நேர்வழியின் பிறப்பிடமாக மாற்றினான்..!
34. முஹம்மத் (ஸல்) அவர்கள், தன் சமூகத்தினர் தந்த கஷ்டங்கள் மற்றும் பிடிவாதத்தில், பொறுமை காட்டி.. மன உறுதியுடன், தொடர்ந்து அழைப்புப் பணி செய்திட.. ,ஆறுதல் தரப்படுகிறது.
35. தன் சமுதாயத்தின் அமானிதத்தை, நபி (ஸல்) ஒப்படைத்தனர்; அறிவுரை பகன்றனர்; இதற்கு நபி (ஸல்) அவர்களே சாட்சி.. என அவர்கள் செய்த நற்பணி தெளிவுபடுத்தப் படுகிறது..!
36. அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொள்வதற்கும், மறுமை நாளின் மீது விசுவாசம் கொள்வதற்கும் இடையே, ஆழமான தொடர்பு உள்ளது. எனவே அல்லாஹ் காட்டுகின்ற அனைத்தையும் நம்புவது அவசியமாகும்!
37. குப்பார் - முஷ்ரிக்குகளின் சூழ்ச்சி என்பதன் கருத்து :-

அவர்களின் சந்தேகங்கள், ஆட்சேபனைகள், பொய்யான குற்றச்சாட்டுகள் மற்றும் அவர்களின் புறக்கணிப்பு ஆகியனவாகும். இவை யாவும் அல்லாஹ்விடம் விசாரணைக்கு உள்ளாக்கப்படும்..!

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

- ஸூரா ஹூத், யூஸுப், அர்-ர.்.து, இப்றாஹீம் ஆகிய அத்தியாயங்கள், நபி (ஸல்) அவர்களுக்கு மன ஆறுதல் அளிப்பதற்காக அருளப்பட்டன..! குறிப்பாக இவ்வத்தியாயங்கள், மக்காவில், நபி (ஸல்) அவர்கள் மீது, கடுமையான ஆட்சேபனைகள், மழையெனப் பொழிந்த காலகட்டத்தில், இறக்கப்பட்டன..!! பிரச்சினை உணர்வுப் பூர்வமானதாக ஆகியிருந்தது; எதிர்ப்புகள் அதீத உச்சத்தை எட்டியிருந்தன..!!! இந்த சமயத்தில்தான், முந்தைய நபிமார்களின் சரித்திரங்கள் எடுத்துரைக்கப்பட்டு, நபி (ஸல்) அவர்களுக்கு உற்சாகம் ஊட்டப்படுகிறது. அத்துடன் குரைஷிகளுக்கும், இப்படி எச்சரிக்கை விடுக்கப்படுகிறது..'கவனியுங்கள்! முந்தைய சமுதாயங்களுக்கு ஏற்பட்ட கதி என்ன? நீங்கள் அவர்களின் வழியில் செல்லாதீர்கள்.. அவ்வாறு சென்றால்.., உங்களுக்கும் இதே கதிதான்! ஏனெனில், நீங்கள் அல்லும் பகலும், நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் பெயரைப் பேசுகிறீர்கள்; ஆனால் அவர்களின் அடிச்சுவட்டைத் தவிர்க்கிறீர்கள்!'

**அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!**

## திருக்குர்ஆன்

وَقَالَ الشَّيْطَانُ لَمَّا قُضِيَ الْأَمْرُ إِنَّ اللَّهَ وَعَدَكُمْ وَعْدَ الْحَقِّ وَوَعَدتُّكُمْ فَأَخْلَفْتُكُمْ ۖ وَمَا كَانَ لِيَ عَلَيْكُم مِّن سُلْطَانٍ إِلَّا أَن دَعَوْتُكُمْ فَاسْتَجَبْتُمْ لِي ۖ فَلَا تَلُومُونِي وَلُومُوا أَنفُسَكُم ۖ مَّا أَنَا بِمُصْرِخِكُمْ وَمَا أَنتُم بِمُصْرِخِيَّ ۖ إِنِّي كَفَرْتُ بِمَا أَشْرَكْتُمُونِ مِن قَبْلُ ۗ إِنَّ الظَّالِمِينَ لَهُمْ عَذَابٌ أَلِيمٌ 14:22

14:22. (மறுமையில் இவர்கள் பற்றித்)தீர்ப்புக் கூறப்பெற்றதும் ஷைத்தான் (இவர்களை நோக்கி) “நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையான வாக்குறுதியையே வாக்களித்திருந்தான் நானும் உங்களுக்கு வாக்களித்திருந்தேன் - ஆனால் நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கில் மாறு செய்து விட்டேன். நான் உங்களை அழைத்தேன் அப்போது நீங்கள் என் அழைப்பினை ஏற்றுக் கொண்டீர்கள் என்பதைத் தவிர எனக்கு உங்கள் மீது எந்த அதிகாரமுமில்லை ஆகவே நீங்கள் என்னை நிந்திக்காதீர்கள் உங்களையே நீங்கள் நிந்தித்து கொள்ளுங்கள் உங்களை நான் காப்பாற்றுபவன் இல்லை நீங்களும் என்னைக் காப்பாற்றுகிறவர்களில்லை. நீங்கள் முன்னால் என்னை (அல்லாஹ்வுக்கு) இணையாக்கிக் கொண்டிருந்ததையும், நிச்சயமாக நான் நிராகரித்து விட்டேன் - நிச்சயமாக அக்கிரமக்காரர்களுக்கு நோவினை மிக்க வேதனை உண்டு என்று கூறுவான்.

وَلَا تَحْسَبَنَّ اللَّهَ غَافِلًا عَمَّا يَعْمَلُ الظَّالِمُونَ ۚ إِنَّمَا يُؤَخِّرُهُمْ لِيَوْمٍ تَشْخَصُ فِيهِ الْأَبْصَارُ 14:42

14:42 மேலும் அக்கிரமக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி அல்லாஹ் பராமுகமாக இருக்கிறான் என்று (நபியே!) நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம் அவர்களுக்கு (தண்டனையை) தாமதப் படுத்துவதெல்லாம், கண்கள் விரைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் (அந்த மறுமை) நாளுக்காகத்தான்.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள், ஈஸா (அலை) அவர்களின் சொல் குறித்த, பின் வரும் வசனத்தை ஓதினார்கள்:

رَبِّ إِنَّهُنَّ أَضْلَلْنَ كَثِيرًا مِّنَ النَّاسِ ۖ فَمَن تَبِعَنِي فَإِنَّهُ مِنِّي ۖ وَمَنْ عَصَانِي فَإِنَّكَ غَفُورٌ رَّحِيمٌ 14:36


14:36. ("என்) இறைவனே! நிச்சயமாக இவை (சிலைகள்) மக்களில் அநேகரை வழி கெடுத்து விட்டன. எனவே, எவர் என்னைப் பின்பற்றுகிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவராவார். எவர் எனக்கு மாறு செய்கிறாரோ (அவர் என்னைச் சார்ந்தவர் இல்லை என்றாலும்) நிச்சயமாக நீ மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றாய்."

பிறகு மேலும் ஒரு வசனத்தை ஓதினார்கள். அதில் ஈஸா (அலை) கூறுகிறார்கள்:

إِن تُعَذِّبْهُمْ فَإِنَّهُمْ عِبَادُكَ ۖ وَإِن تَغْفِرْ لَهُمْ فَإِنَّكَ أَنتَ الْعَزِيزُ الْحَكِيمُ 5:118

5:118. (இறைவா!) நீ அவர்களை வேதனை செய்தால் (தண்டிப்பதற்கு முற்றிலும் உரிமையுள்ள) உன்னுடைய அடியார்களாகவே நிச்சயமாக அவர்கள் இருக்கின்றனர் அன்றி, நீ அவர்களை மன்னித்து விடுவாயானால், நிச்சயமாக நீ தான்(யாவரையும்) மிகைத்தோனாகவும் ஞானமிக்கோனாகவும் இருக்கின்றாய்" (என்றும் கூறுவார்).

அதற்குப்பின் நபி (ஸல்) அவர்கள், தன் இரு கைகளையும் ஏந்தியவர்களாக "யா அல்லாஹ்! என் சமுதாயம்.. என் சமுதாயம்.." என்றனர். பிறகு அழ ஆரம்பித்தார்கள். உடனே அல்லாஹ் கூறினான்: "உம்முடைய 'ரப்', அறிகின்ற நிலையில், ஜிப்ரீலே! முஹம்மதிடம் நீர் செல்க! உம்மை அழவைத்தது எது? எனக் கேட்டிடுக!" எனவே ஜிப்ரீல் (அலை), நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அதனை வினவினார்கள். எனவே அல்லாஹ் மிகவும் அறிந்தவனாக இருக்கின்ற நிலையில், நபி (ஸல்) அவர்கள், தன் விபரத்தை எடுத்துரைத்தார்கள். பிறகு அல்லாஹ், சொன்னான்: "ஜிப்ரீலே! முஹம்மதிடம் செல்க!! நிச்சயமாக நாம் உம்முடைய சமுதாயத்தினர் விஷயத்தில், உம்மைத் திருப்திபடுத்துவோம்; உம்மை இழிவுபடுத்த மாட்டோம்.. என உரைத்திடுக!!"
(ஸஹீஹ் முஸ்லிம்: 202)



# سُوْرَةُ الْحِجْرِ

## ஸூரா அல்-ஹிஜ்ர்
## மலைப் பாறை

15

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

❖ அல்லாஹ் - தன் மார்க்கத்தைக் காப்பாற்றுகிறவன்..! எனவே எதிரியைக் கண்டு அஞ்சாமல், அழைப்பு மற்றும் சீர்திருத்தப்பணியில் ஈடுபட.., இவ்வத்தியாயம் கூறுகிறது.1

❖ இப்லீஸ், ‘மனிதர்களை நான் வழிகெடுப்பேன்’ என்றுரைத்தபோது, ‘எனது நல்லடியார்களுக்கு, எந்த ஒரு கேட்டையும் உன்னால் விளைவிக்க முடியாது..’ என அல்லாஹ் கூறினான்! இது, இஸ்லாம், திருக்குர்ஆன், மற்றும் முஸ்லிம்களின் பாதுகாப்பை, அல்லாஹ்வே ஏற்றிருப்பதைப் போலிருக்கிறது.

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ 15:9

15:9. நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.

❖ ‘ஹிஜ்ர்’ என்பது, மதீனஹ் முனவ்வரஹ் மற்றும் ஷாம் (சிரியா) விற்கும் இடையே உள்ள ஒரு பள்ளத்தாக்காகும்; ஸமூது-கூட்டத்தினரின் வசிப்பிடம் அங்கு உண்டு..!

❖ ‘ஹிஜ்ர்’ என்பது, ‘ஹஜர்’ (பாறை) என்ற பதத்தில் இருந்து வந்திருக்கிறது; ஏனெனில், ‘ஹிஜ்ர்’ வாசிகள், பாறைகளைக் குடைந்து வீடுகள் கட்டுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

وَكَانُوا يَنْحِتُونَ مِنَ الْجِبَالِ بُيُوتًا آمِنِينَ 15:82

15:82. அச்சமற்றுப் பாதுகாப்பாக வாழலாம் எனக்கருதி, அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்துக் கொண்டார்கள்.

❖ ‘க.்.பஹ்’ வை நெருங்கி இருப்பதாலும் இப்பெயர் வந்திருக்கலாம் - அல்லாஹ் மிக அறிந்தவன்.!

❖ அல் ஹிஜ்ர் ! இது ஸமூது கூட்டத்தினர் வாழ்ந்த இடம் ஆகும். அங்கு பாறைகளைக் குடைந்து.. இடி, புயல், நிலநடுக்கம் போன்றவைகளால், அசைக்க முடியாத வகையில்,... அவர்கள் வீடுகளைக் கட்டினார்கள்.. 2

---

1. விபரங்களுக்கு: الدعوة الى الله وأخلاق الدعاة – عبد العزيز بن عبد الله بن باز
2. விபரங்களுக்கு: التفسير طبري ج ١٧ / ص ١٢٦

## சில தலைப்புகள்
### *Few Topics*

1. திருக்குர்ஆன் குறித்து முஷ்ரிக்குகளின் நிலைபாடு மற்றும் அவர்களின் வரம்பு மீறல் பற்றிய விபரம்! (1-8)
2. அல்லாஹ் தருகின்ற பாதுகாப்பு – விபரம் (9)
3. முந்தைய சமுதாய மக்கள் தங்களின் நபிமார்களைப் பொய்ப்பித்த விபரம். (10 -15)
4. தன்னுடைய அடியார்கள் மீது, அல்லாஹ்வின் வல்லமையும், அவனது அருட்கொடைகளிள் விபரமும். (16 – 25)
5. மனிதனையும் ஜின்னையும் படைத்தல் மற்றும் ஆதம் (அலை) அவர்களுக்கு மலக்குகள் 'ஸஜதா' செய்வதும். (26 – 30)
6. இப்லீஸின் மறுப்பு மற்றும் அவனைப் பின்பற்றியோரின் முடிவு. (31 – 44)
7. இறையச்சமுள்ளோர், பெறுகின்ற நன்மையும், அவர்கள் காணப்போகும் முடிவும்.(45- 50)
8. இப்றாஹீம் (அலை) அவர்களின் விருந்தாளிகளும், நபி லூத் (அலை) அவர்களின் மோசமான சமூகம் சந்தித்த முடிவும். (51-77)
9. 'அஸ்ஹாபுல் அய்கஹ்' மற்றும் 'அஸ்ஹாபுல் ஹிஜ்ர்' - விபரம் (78 – 86)
10. நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய சிறப்பு மற்றும் அவர்களுக்குத் தரப்பட்ட நற்செய்திகள். (87 – 99)

## சில பாடங்கள்
### *Few Lessions*

1. யாரேனும் ஒரு சோதனையைக் கண்ணுற்றால், மனமுடைவது சரியல்ல..! மாறாக நபிமார்கள், சோதனையான கட்டங்களில், அல்லாஹ்வின் உதவியை, எவ்வாறு பெற்றார்கள்? என்பதை மனக்கண்ணில் கொண்டு வருக..!![1]
2. குர்ஆன் மஜீத் - சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவாகப் பிரித்துக்காட்டும்!

---

1. விபரங்களுக்கு: الضوابط الشرعية لموقف المسلم من الفتن – صالح بن عبد العزيز آل الشيخ

3. தூய ஏகத்துவத்தில், அதாவது ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்பதிலே மரணிப்பவர், முடிவைப் பொறுத்தவரை.. சுவனவாதி ஆவார்.
4. முஷ்ரிக்குகள் மற்றும் குப்பார்களுக்கான கூலி, இவ்வுலகத்திலேயே அவர்களின் எண்ணத்திற்கேற்ப தரப்படுகிறது.
5. மரணிக்கும் வேளை வருவதற்கு முன்வரை, ஒவ்வொருவருக்கும் (அமலுக்கான) அவகாசம் தரப்பட்டிருக்கிறது.
6. வானவர்களின் வருகை, இறை செய்தியைத் தருவதற்காக, வேதனையைக் கொண்டு வருவதற்காக, அல்லது மரணத்தைத் தருவதற்காகவே இருக்கும்..!
7. திருக்குர்ஆன் இறங்கியிருப்பது, மலக்குகளின் வருகையை விட மேலானதாகும். இறைத் தூதர்களையும், திருக்குர்ஆனையும் பாதுகாப்பது, அல்லாஹ்வே ஆகும்.
8. தமது நபிமார்களைக் கேலி செய்த, முந்தைய சமூகத்தினரைப் போன்றுதான், இந்த சமுதாயத்தினர், உங்களைப் பரிகாசம் செய்கின்றனர். எனவே மனமுடைந்திட வேண்டாம் என நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் வழங்கப்படுகிறது..!
9. ஒரு இறை அழைப்பாளர், தன் வசமிருக்கும் இறைச் செய்தியை, எடுத்துரைப்பதில்தான் கவனம் காட்டவேண்டும்; அச் செய்தி ஏற்கப்படுவதில் அல்ல! மக்கள் விசுவாசிக்க மறுத்தால், மக்கள், இதற்கு முன்பும் இவ்வாறு மறுத்துள்ளார்கள்தானே..!
10. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் அல்லாஹ்வின் அத்தாட்சிகள்; அவ்வாறே அவை அவனுடைய வல்லமையையும் வெளிப்படுத்துகின்றன!
11. திருக்குர்ஆனை, அல்லாஹு தஆலா இறக்கிய அதே வேளை, இவ்வுலகத்தின் வானத்தை, ஷைத்தான்களை விட்டும் பாதுகாத்து விட்டான்.
12. வானவர்களின் பேச்சுக்களை, செவியேற்கும் ஷைத்தான்களுக்காக, (எரி) நட்சத்திரங்கள் சாட்டப்படுகின்றன!
13. அல்லாஹ் தன் ஞானம் மற்றும் திட்டத்தின்படி, பூமி நிலைகொண்டு, அது தன் விளைச்சலை வெளிப்படுத்திட, பூமியை விரிப்பாக்கி, அதன் மேல் மலைகளை (ஆணியறைந்ததைப் போல்) நிறுவியுள்ளான்.
14. உண்பதற்காகவும், பருகுவதற்காகவும், இன்னும் நாம் வாழ்வதற்காகவும் காரண காரியங்களை அமைத்திருக்கிறான். இன்னும் சில பொருட்களை நம்மிடம் வழங்கியிருக்கின்றானே!, அவைகளுக்கான வாழ்வாதாரத்தையும் அல்லாஹ்வே ஏற்றிருக்கின்றான்; உதாரணமாக: விலங்குகள், பணியாளர்கள் போன்று..
15. புவியில் விளைகின்றவை மற்றும் விண்ணில் இருந்து பொழிபவை

அனைத்திற்கும், அல்லாஹ்வே முழு உரிமையாளன் ஆவான்..!

16. மேகங்களை இங்குமங்கும் எடுத்துச் செல்கின்ற காற்றுக்களையும், அல்லாஹ் அனுப்புகிறான். விண்ணில் இருந்து இறக்குகிறவனும் அவனே! பசுமையைத் தருகிறவனும் அவனே! இதனைப் பாதுகாப்பவனும் அல்லாஹ்தான்..!

17. அல்லாஹ் தன் வல்லமையின் பரிபூரணத்தை, முந்தியவர்களையும் பிந்தியவர்களையும் படைப்பதிலே, வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான்..!

18. மழை உதாரணமாகத் தரப்பட்டு, இறந்தவர்கள் மீண்டும் எழுப்பப்படுவது நிரூபிக்கப்படுகிறது!

19. 'வெறுமை' யில் இருந்து, மனிதனை அல்லாஹ், உண்டாக்கியுள்ளான்; (கருவில்) மனிதன் படைக்கப்படுகின்ற நிலைகள் பற்றி, 1400 ஆண்டுகள் முன், (குர்ஆனில்) கூறப்பட்ட விதத்திற்கு, இன்று (அறிவியல்) சான்றுகள் கிடைக்கின்றன!

20. அல்லாஹ், மனிதனைத் தன் கைகளால் படைத்தான்; பின்பு வானவர்களைச் சிரம் பணிய வைத்தான் - இதில் மனிதனின் மாண்பு புலனாகின்றது.

21. இப்லீஸ் மறுமைநாள் வரை சபிக்கப்பட்டவன்; அவன் எந்த நன்மையையும் பெறப் போவதில்லை!

22. முதல் 'ஸூர்' ஊதப்படுகின்ற வரை, மனிதர்களை, அல்லாஹ்வின் பாதையில் இருந்து, வழிகெடுக்க, இப்லீஸுக்கு அவகாசம் தரப்பட்டுள்ளது.

23. மனத் தூய்மை (இக்லாஸ்) கொண்ட அல்லாஹ்வின் அடியார்கள், ஷைத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் தந்திரங்களில் இருந்து, பாதுகாப்புடன் இருப்பார்கள்.. அவர்கள் மீது ஷைத்தானின் எத்தகைய தாக்குதலும் செல்லுபடியாகாது!

24. இப்லீஸ் மற்றும் அவனை ஏற்றுக்கொண்டோர், ஏழு வாசல்கள் கொண்ட நரகத்தில், இருப்பர்.

25. இறையச்சமுள்ளவர்களை, அல்லாஹ் அனைத்து வகையான குறைகளில் இருந்தும் பரிசுத்தப்படுத்தி, சுவனத்தில் நுழையவைப்பான்.

26. இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு, அல்லாஹ் முதுமையில் குழந்தை பாக்கியத்தைத் தந்தான். எனவே மனிதர்கள், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இழந்து, அவசர கதியில் முடிவெடுக்கலாகாது.

27. வழிகெட்டவர்கள்தான், அல்லாஹ்வின் அருளில் இருந்து, நம்பிக்கை இழப்பார்கள்..!

28. லூத் (அலை) காலத்து மக்கள், இயற்கைக்கு மாற்றமாக, குற்றம் புரிந்தபோது, - பெண்களைத் தவிர்த்துவிட்டு,

குழந்தைகள் மற்றும் பெரியவர்களிடம், தமது இச்சையைத் தணிக்கத் துணிந்தபோது, அல்லாஹ் அவர்களைத் தண்டித்தான்; பூண்டோடு அழித்தான்.

29. அஸ்ஹாபுல் அய்கஹ் - தோட்டவாசிகளை, அல்லாஹ் அவர்களின் பாவத்தின் காரணத்தால் அழித்தான்.!

30. உலகத்தில், காபிர்களுக்குக் கிடைக்கின்ற பகட்டான வாழ்க்கையைப், பேராசைக் கண்களோடு பார்க்க வேண்டாம்; அதற்காக கவலையுற வேண்டாம்..! ஏனென்றால், இவை அனைத்தையும், விடச் சிறப்பான, இஸ்லாம் போன்ற பெரும் பாக்கியங்களை, நாம் பெற்றுள்ளோம்.

31. அல்லாஹ், ஒவ்வொருவரிடமும், 'நீ என்ன செய்தாய்? என கண்டிப்பாகக் கேள்வி கேட்பதைச், சத்தியமிட்டுத் தெளிவுபடுத்துகிறான்.

32. ஒரு இறை அழைப்பாளர், இணைவைப்பவர்களின், தொல்லைகளைக் கண்டு கொள்ளாமல், முடிவை அல்லாஹ்விடம் விட்டு விட்டு, த..வா எனும் கடமையை – அழைப்புப் பணியை நிறைவேற்றுக!

33. ஓர் இறை அழைப்பாளர் (தாயீ), அல்லாஹ்வை அதிகமாகத் துதிப்பதும் - முறையாகத் தொழுகையைக் கடைபிடிப்பதும், அவசியம் ஆகும்; இதனால் கவலைகள் நீங்கும்!

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

❖ ஸூரா யூனுஸ் முதல் ஸூரா இப்றாஹீம் வரை, நபிமார்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன! பிறகு ஸூரா ஹிஜ்ர் முதல் ஸூரா கஹ்ப் வரை உள்ள அத்தியாயங்களின் கருத்துக்கள் மற்றும் பெயர்கள், நபிமார்களின் சமூகங்களை அடிப்படையாகக் கொண்டு, அமைக்கப்பட்டுள்ளன! அங்கு அழைப்பாளர்கள் குறித்த பார்வை அதிகமாகத் தென்படுகிறது எனில், இங்கோ அழைக்கப்பட்டோர் குறித்த பார்வை, அதிகமாகத் தெரிகிறது..!

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

15:49 نَبِّئْ عِبَادِي أَنِّي أَنَا الْغَفُورُ الرَّحِيمُ

15:49 (நபியே!) என் அடியார்களிடம் அறிவிப்பீராக: "நிச்சயமாக நான் மிக்க மன்னிப்போனாகவும், மிக்க அன்புடையவனாகவும் இருக்கின்றேன்."

15:50 وَأَنَّ عَذَابِي هُوَ الْعَذَابُ الْأَلِيمُ

15:50 "(ஆயினும்) நிச்சயமாக என்னுடைய வேதனையும் நோவினைமிக்கதாகவே இருக்கும்" (என்றும் சொல்லும்).

15:92 فَوَرَبِّكَ لَنَسْأَلَنَّهُمْ أَجْمَعِينَ

15:92 உம் இறைவன் மீது ஆணையாக, நிச்சயமாக நாம் அவர்களனைவரையும் விசாரிப்போம்.

15:93 عَمَّا كَانُوا يَعْمَلُونَ

15:93 அவர்கள் செய்து கொண்டிருந்த (எல்லாச்) செயல்களைப் பற்றியும், (நாம் விசாரிப்போம்).

## அல்ஹதீஸ்

அபூதர் கிபாரீ (ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் அறிவித்ததாக நபி (ஸல்) கூறினார்கள்: ‘‘என் அடியார்களே! அநீதமிழைப்பதை எனக்கு நானே, ஹராமாக்கிக் கொண்டேன்! உங்களுக்கு மத்தியிலும், அதனைத் தடைசெய்யப்பட்டதாக, ஆக்கிவிட்டேன்.. எனவே ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாதீர்!! என் அடியார்களே! நான் நேர்வழியை, வழங்கியோரைத் தவிர, யாவரும் வழிதவறியவர்களே!! ஆகவே என்னிடம் நேர்வழியைத் தேடுங்கள்; நான் உங்களுக்கு வழிகாட்டுவேன்.. என் அடியார்களே! நான் உணவளித்தவர்களைத் தவிர, அனைவரும் பசித்தவர்களே! எனவே என்னிடம் உணவைக் கேளுங்கள்; உங்களுக்கு உணவு தருவேன்.. என் அடியார்களே! நான் ஆடையணிவித்தவர்களைத் தவிர, மற்றவர்கள் நிர்வாணிகளே! எனவே என்னிடம் உடையை எதிர்பாருங்கள்; உங்களுக்கு நான் உடை தருவேன்.. என் அடியார்களே! இரவும் பகலும் தவறிழைக்கிறீர்கள்!! நான் அனைத்துப் பாவங்களையும் மன்னிக்கிறேன்.., என்னிடம் பிழைபொறுக்கத் தேடுங்கள்; உங்களை நான் மன்னிக்கிறேன்.. என்

அடியார்களே! எனக்கு இடரளிக்கும் இடத்தை நீங்கள் அடைந்து, நீங்கள் எனக்குத் தீங்கிழைக்க இயலாது.. எனக்குப் பயனளிக்கும் இடத்தை அடைந்து, நீங்கள் எனக்குப் பயன்தரவும் முடியாது!! என் அடியார்களே! உங்களில் முதலாமவர், இறுதியானவர், மற்றும் மனிதர்கள், ஜின்கள்.., என யாவருமே, - உங்களில் இருக்கின்ற, உள்ளத்தில், மிகுந்த இறையச்சம் கொண்ட ஒருவரைப் போல், ஆகிவிட்டாலும் என்னுடைய ஆட்சியில், எதுவும் அதிகரிக்கப் போவதில்லை.. என் அடியார்களே! உங்களில் முதலாமவர், இறுதியானவர், மற்றும் மனிதர்கள், ஜின்கள்.., என எல்லோருமே, - உங்களில் இருக்கின்ற, அதி மோசமான உள்ளம் கொண்ட ஒருவரைப் போல் ஆகிவிட்டாலும், என்னுடைய அதிகாரத்தில் எதுவும் குறைந்துவிடப் போவதில்லை.. உங்களில் முதலாமவர், இறுதியானவர், மற்றும் மனிதர்கள், ஜின்கள்.., என அனைவரும் பூமியில் கூடி நின்று, என்னிடம் பிரார்த்தித்து, அவர்கள் அனைவரின் வேண்டுதல்களையும், நான் வழங்கிவிட்டாலும், என்னிடம் இருப்பதில், கடலில் நுழைக்கப்பட்ட ஊசியின் அளவே தவிர வேறெந்தக் குறைவும், வந்துவிடப் போவதில்லை,, என் அடியார்களே! அவை உங்களின் அமல்களே! அவைகளை உங்களுக்காகத்தான் கணக்குப் பாரக்கிறேன்; பின்பு அவைகளுக்காகப் பூரணமாகக் கூலி தருகிறேன். யார் நன்மையைப் பெற்றுக் கொள்கிறாரோ, அவர் அல்லாஹ்வைப் புகழட்டும் ; யார் இதனை விடுத்து (தீமையை) பெற்றிடுவாரோ, அவர் தன்னையே சபிக்கட்டும்.!! (முஸ்லிம் : 2577)



# سُوْرَةُ النَّحْلِ

## ஸூரா அன்-நஹ்ல்
## தேனீ

16

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ இந்த ஸூராவின் மையக் கருத்து : ஏகத்துவம், மீண்டும் எழுப்பப்படுதல், இறை செய்தி, ஆதாரத்தை நிலை நாட்டுதல், படைப்புகளில் உள்ள ஆதாரங்கள், அருட்கொடைகளின் பெருக்கம், அல்லாஹ்வின் அத்தாட்சிகள், அல்லாஹ்வின் நாட்கள் ஆகியவைகளின் கலவை ஆகும்.
- ❖ இந்த அத்தியாயத்தின் நோக்கம்: அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துதல்.1
- ❖ இந்த ஸூராவில், அல்லாஹ்வுடைய எண்ணற்ற அருட்கொடைகள் பேசப்படுகின்றன!

وَإِن تَعُدُّوا نِعْمَةَ اللَّهِ لَا تُحْصُوهَا ۗ إِنَّ اللَّهَ لَغَفُورٌ رَّحِيمٌ 16:18

16:18. இன்னும் அல்லாஹ்வின் அரு(ட் கொடைக)ளை நீங்கள் கணக்கிட்டால், அவற்றை (வரையறை செய்து) நீங்கள் எண்ணி முடியாது! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், மிகக் கருணையுடையோனாகவும் இருக்கின்றான்.

- ❖ இவ்வத்தியாயம், அந்-நஹ்ல்(தேனீ) எனப் பெயரிடப்பட்டுள்ளது.. காரணம், தேனீ – ஒரு அருட்கொடை என்கிற விதத்தில், அதைப்பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.(வசனம்:68-69)2
- ❖ அந் நஹ்ல் அத்தியாயத்தில், அழைப்புப் பணி மற்றும் விவாதித்தல் குறித்து ஏவப்பட்டுள்ளது; அறிவார்ந்த அழைப்புப் பணி, அழகிய உபதேசம், முறையான தர்க்கம், மூலமே நிகழ்கிறது..! அஷ்ஷைக் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘மக்களில் மூன்று வகையினர் உண்டு! 1) அறிவார்ந்த முறையில் விளங்கிடுவோர் 2) அழகிய உபதேசத்தால் புரிந்திடுவோர் 3) விவாதித்து முடிவெடுப்போர் அல்லது ஆதாரம் நிலை பெற்றதற்கான அத்தாட்சியெனத் திகழுவோர்..!3
- ❖ இஸ்லாம், உலகில் நேர்மறையான அபிவிருத்தியில் (positive development) இருந்து தடுப்பதில்லை; அதே சமயம் அது, இஸ்லாமிய விதிமுறைகளோடு, மோதாமல் இருக்கவேண்டியது நிபந்தனையாகும்.

---

1. விபரங்களுக்கு : شكر النعمة : حقيقته وعلاماته – الشيخ بن باز غفر الله له
2. விபரங்களுக்கு: التفسير قرطبي ج/ ١٠/ ص ١٢٢
3. விபரங்களுக்கு: دعوة غير المسلمين – عبد الرزاق البدر العباد

# சில தலைப்புகள்
## *Few Topics*

1. அல்லாஹ்வைப் பற்றிய ஏகத்துவக் கொள்கைக்கான, அத்தாட்சிகள், அவனுடைய வல்லமை மற்றும் அவனுடைய அன்பளிப்புகள் குறித்த விவரங்கள். (1 - 23)
2. தற்பெருமை உடையோருக்கு உலகத்திலும் மறுமையிலும் ஏற்படும் முடிவு! (24 - 29)
3. மறுமைநாளில் இறையச்சமுள்ளவர்களுக்குக் கிடைக்கும் முடிவு..! (30-32)
4. மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவது பற்றி, முஷ்ரிக்குகளுக்கு இருந்த தவறான கருத்துக்கள்!(65-) (33-40)
5. ஹிஜ்ரத் செய்தவர்களுக்கான நற்கூலி (41-42)
6. நபிமார்களின் தன்மையும் அவர்களின் முக்கியத்துவமும் (43-44)
7. காபிர்களுக்கான எச்சரிக்கை! (45-48)
8. அனைத்துப் பொருள்களும் அல்லாஹ்வைச் சிரம்பணிதல். (49-50)
9. முஷ்ரிக்குகளின் தவறான கொள்கைக்கு மறுப்பும், அவர்களின் முடிவு பற்றிய விபரமும். (51-64)
10. அல்லாஹ்வின் வல்லமையை அறிவிக்கின்ற, அவனது அளவிலா அருட்கொடைகளும் முஷ்ரிக்குகள் அவ்வருட்கொடைகளை மறப்பதும். (65-73)
11. தவ்ஹீதை, வணக்க வழிபாட்டில் கடைபிடிப்பதற்கான உதாரணங்கள்..! (74-76)
12. அல்லாஹ்வின் பரிபூரணமான வல்லமையையும், சூழ்ந்தறியும் தன்மையையும், வெளிப்படுத்துகின்ற.., அவனுடைய அருட்கொடைகள் பற்றிய விபரம் மற்றும் அருட்கொடைகளை ‘முஷ்ரிக்குகள்’ மறுப்பது, குறித்த விபரம் ..! (77-83)
13. மறுமைநாளின் பயங்கரங்கள் பற்றிய விபரம்! (84-89)
14. மு.்.மின்களுக்கான வழிகாட்டுதல்கள்.. (90-96)
15. நல்லறங்களில் ஈடுபடுகின்ற மு.்.மின்களுக்கு, சிறப்பு மிக்க வாழ்க்கைக்கான வாக்குறுதி!(97)
16. திருக்குர்ஆனைப் படிப்பதற்கான உத்தரவும், ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு தேடுவதற்கான விபரமும்! (98-100)
17. வசனங்களை மாற்றியதன் (نسخ) சூட்சுமம் (101)
18. திருக்குர்ஆனின் முக்கியத்துவமும், தவறாகச் சித்தரிப்போருக்கான

சவாலும். (102-105)

19. மார்க்கத்திலிருந்து மாறியவர்களுக்கான கூலி மற்றும் அவர்களின் தன்மைகள். (106-110)
20. மார்க்கத்திற்காக நாடு துறப்போருக்கான (ஹிஜ்ரத்) கூலி. (111)
21. அருட்கொடைகளில், நன்றி மறப்போருக்கான உதாரணம். (112-113)
22. ஹராம் - ஹலால், அல்லாஹ்வின் கரங்களில் இருப்பதற்கான ஆதாரம். (114-119)
23. இப்றாஹீம் (அலை) அவர்களின் தன்மைகளும், அவர்களைப் பின்பற்ற நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டளையும். (120-123)
24. யூதர்களுக்கும், அஸ்ஹாபுஸ்-ஸப்த் (சனிக்கிழமை வாசிகளுக்கும்) எச்சரிக்கை! (124)
25. நபி (ஸல்) அவர்களுக்கும், இறை அழைப்பாளர்களுக்கும் சில அறிவுரைகள்! (125-128)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. எப்போதும் சத்தியமே வெல்கிறது! [1]
2. இந்த ஸூராவில் அருட்கொடைகளை மறுப்பது குறித்து எச்சரிக்கை தரப்பட்டுள்ளது.
3. விசுவாசம் கொண்ட இறையடியார்கள், மரணமாக இருப்பினும், இறைத் தண்டனையாக இருப்பினும் அவசரம் காட்டலாகாது; குறிப்பிட்ட நேரம்வரை அதனைப் பிற்படுத்துவது, அல்லாஹ்வுடைய ஞானத்தின் பாற்பட்டதாகும்..!
4. அல்லாஹ் அனைத்துவிதமான குறைகளுக்கும் அப்பாற்பட்டவன்; பரிசுத்தமானவன்..! அவனுக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; மனைவி – மக்களுமில்லை; அவனுக்கு நிகராக எவருமே இல்லை!! எந்த ஒன்றிலும் அவன் ஆற்றல் மிக்கவன்!!!
5. இறைச் செய்தி (வஹீ) – அது அல்லாஹு தஆலாவுடைய உத்தரவின்படியே இறங்கும்.. நபிமார்களுக்கும் இறைத் தூதர்களுக்கும், வானவர்களே அதனைக் கொண்டு வருகின்றனர்..! எனவே அதனை நம்பிக்கை கொள்வதும், அந்நேர்வழியைப் பின்பற்றுவதும் கட்டாயமானதாகும்.

---

1. விபரங்களுக்கு:اظهار الحق : رحمة الله بن خليل الرحمن الهندي

6. அல்லாஹ் விண்ணில் இருந்துதான் உடலுக்குத் தேவையான உணவை இறக்குகிறான்; அவ்வாறே உள்ளம் மற்றும் ஆத்மாவிற்குத் தேவையானதையும் விண்ணில் இருந்தே, இறைச் செய்தி (வஹீயின்) வடிவில் அருளியுள்ளான்.
7. மனிதனின் அசல்வாழ்க்கை, ஈமான் எனும் விசுவாசத்தில்தான் உள்ளது; விசுவாசமில்லாத உடல், சடலத்தைப் போன்றதாகும்! எந்த அளவிற்கெனில், அர்த்தமுள்ள வாழ்க்கையே, ஹிதாயத் எனும் நேர்வழியில்தான் அமைந்துள்ளது..!
8. படைப்புகளில் ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்துவதும், வணக்கமாகும்; யார் கவனமாகச் சிந்திக்கிறாரோ, அவர் அல்லாஹ்வின் ஞானத்தையும், திட்டமிடுதலையும் உணர்ந்து கொள்வார்.
9. அல்லாஹ்வின் மகத்துவம் அறியப்படுவதற்காக, அவன் விண்ணையும், மண்ணையும், சத்தியத்தைக் கொண்டு படைத்துள்ளான்.
10. வாகனம், அல்லாஹ்வின் குறிப்பிட்ட ஒரு பாக்கியமாகும்; இதன் மூலம், மனிதன் கஷ்டங்களில் இருந்தும் களைப்பில் இருந்தும் விடுபடுகிறான்.
11. அழகலங்காரம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதே! ஆனால் ஹராமான இடங்கள், ஹராமான செயல்கள், பாவகரமானதாகும்.
12. வாகனங்களை அல்லாஹ் அலங்காரமாகவும், பயணிப்பதற்கான சாதனமாகவும் ஆக்கியுள்ளான். மேலும் ويخلق ما لا تعلمون "நீங்கள் அறியாதவைகளையும் அவன் படைப்பான்" என்கிற பதத்தின் மூலமாக, மக்கள் சிந்தித்து புதிய வாகனங்களைக் கண்டுபிடிப்பதற்காக, மனித - முன்னேற்றத்தின் தளத்தை, அல்லாஹு தஆலா திறந்து தருகிறான்..!
13. எவ்வாறு அல்லாஹு தஆலா, விலங்குகளை மனிதர்களுக்கு (வாகனமாகக்) கட்டுப்பட்டு நடக்கவைத்தானோ, அவ்வாறு மனிதர்கள் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டவர்களாக, ஏன் வாழக் கூடாது..!?
14. أَفَمَن يَخْلُقُ كَمَن لَّا يَخْلُقُ (16:17). (அனைத்தையும்) படைக்கிறானே அவன், (எதையுமே) படைக்காத (நீங்கள் வணங்குப)வை போலாவானா? ஆக படைக்கப்பட்டவனைப், படைத்தவனோடு ஒன்றிணைத்து உதாரணம் காட்டினால் - வழிபட்டால், அது அறியாமையே! அறிவுச் சீர்கேட்டின் அடையாளமே ஆகும்.!!
15. மனிதன் எப்போதுமே மறதியாளன்; நினைவூட்டலும், அறிவுரைகளும், அவ்வப்போது தேவைப்படுகின்றன! திருக்குர்ஆன் அல்லாஹ்வின் அருட்கொடைகளை, அவனுக்கு ஞாபகமூட்டுகின்ற - மிகச் சிறப்பான நிவைபடுத்தும் கருவி

ஆகும்.!

16. இந்த அருட்கொடைகளும், அடையாளங்களும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பறைசாற்றுகின்றன..! எவர்களின் உள்ளங்கள், துருப்பிடித்துவிட்டனவோ அவர்களே, ஆதாரங்களையும் சான்றுகளையும் மறுக்கின்றார்கள்; அவர்கள், அதிகமாகத் திருக்குர்ஆனை ஓதி வருவதும், பிழைபொறுக்கத் தேடுவதும் அவசியமானதாகும்.

17. மறுமையை நம்பாமல், பாவங்களில் வீழ்ந்து கிடப்பவர்களின் உள்ளங்கள், முத்திரையிடப்படுகின்றன; உபதேசம் அவர்களுக்கு எந்தப் பயனையும் தராது..!

18. படைப்புகளை உருவாக்கியவன், அவைகளில் மறைந்து கிடக்கின்ற இரகசியங்களை அறிவதைப் போல், வெளிப்படையானவைகளையும் அறிந்தே இருக்கின்றான்; எனவே மனிதன் அலட்சியம் தவிர்த்திடுக!

19. அல்லாஹு தஆலா, தன் மீதான விசுவாசத்துடன், மறுமை விசுவாசத்தையும் இணைத்துக் கூறியுள்ளான். ஏனெனில் நற்கூலி மற்றும் தண்டனை என்கிற கொள்கையை அடிப்படையாக வைத்து, அவன் ஒரே இறைவனையே வணங்கச் சொல்கிறான்..!

20. திருக்குர்ஆன், நபிமார்கள் மற்றும் நல்லடியார்களின் சரித்திரங்களின் மூலமாக, மனிதர்களின் அறிவு, ஆத்மா, மற்றும் அவர்களின் செயல்பாடுகள் யாவற்றையும் சீர்படுத்துகிறது.

21. காபிர்களுக்கு நிகழும் முடிவை உரைத்தபின், மு.ஃ.மின்களுக்குக் கிடைக்கின்ற நற்கூலியை, ஒன்றன்பின் ஒன்றாக (அடுத்தடுத்து) எடுத்துரைப்பது, ‘ஆர்வமூட்டிப் பண்படுத்துகின்ற’ ஒரு போதனைமுறை ஆகும். இறையழைப்பாளர்கள், இத்தகைய முறையைக் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

22. எல்லா சமுதாயங்களிலும் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்! அனைவரின் போதனையும் ஒன்றே!! தாகூத்தை - ஷைத்தானை வணங்குவதை விட்டுவிட்டு, அல்லாஹ்வை மட்டும் வணங்கவேண்டும் என்பதே அவர்களின் போதனை!!!

23. அல்லாஹ், மனிதர்களை நன்மை மற்றும் தீமையில் ஈடுபடும் தன்மையோடு படைத்தான்; சிந்திப்பதிலும், எண்ணுவதிலும் அவனுக்கு சுதந்திரத்தைத் தந்துவிட்டான்; மேலும் அந்த நன்மையையும் தீமையையும் பிரித்தறிய, ‘அறிவு’ எனும் அருட்கொடையையும் வழங்கிவிட்டான்.

24. நபிமார்களின் பணி இதுவாகவே இருந்தது: ‘‘மக்களை, ஒரே இறைவனை வணங்கத் தூண்டுவது, மற்றும் அவனை விட்டுவிட்டு சிலை வணக்கத்திலும், மனோ இச்சைகளிலும் வீழ்ந்திருப்போரைத் (திருத்தித்)தடுப்பது’’

25. நபிமார்கள் எப்போதுமே மனிதர்களாகவே இருந்தார்கள்; வானவர்களாக இருக்கவில்லை.. ஏனெனில் அப்போதுதான் அவர்களை மக்கள் பின்பற்ற இயலும்!.
26. ‘மக்கத்து இணைவைப்பாளர்கள், அல்லாஹ்வை ஏற்றிருந்தார்கள்.. மரணித்தவர்கள் மீண்டும் உயிருடன் எழுப்பப்படுவதையே மறுத்தார்கள்’.. இத்தகைய அவர்களின் சந்தேகத்திற்குப் பதில் தரப்படுகிறது! இந்த, அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியே தீரும்.!!
27. கல்விமான்களின் சிறப்பும் மேன்மையும் நிலைநாட்டப்படுகிறது..! ‘ஏதேனும் ஒரு சட்டத்தை, நீங்கள் அறியாவிட்டால், அவர்களிடம் வினவுக.. அவர்கள் மார்க்கத்தின் நம்பிக்கையாளர்கள்’ எனப் போதிக்கப்படுகிறது.!!
28. யார், அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது, உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளார்களோ – யாருடைய ஈமான் மற்றும் இறைநம்பிக்கை, அல்லாஹ்வின் பாதையில் அனைத்தையும் தத்தம் செய்திடத் தூண்டுகிறதோ, அவர்களை அல்லாஹ் கண்ணியப்படுத்துகிறான்.
29. அல்லாஹ் தன் ஞானத்திற்கேற்ப, குற்றவாளிகளுக்கு, அவகாசம் தருகிறான்; உணவு தருகிறான்; அவர்களை மன்னிக்கின்ற வகையில் அவர்களோடு நடந்துகொள்கிறான்.. அதே சமயம் இவர்களோ, அல்லாஹ்வை – அவனுடைய நண்பர்களைத் துன்புறுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், அல்லாஹ்வின் சூழ்ச்சியை அஞ்சிக் கொண்டே இருக்கட்டும்!
30. பாவமன்னிப்பிற்கான வாசலை, அல்லாஹ் எல்லோருக்காகவும் திறந்து வைத்திருக்கிறான்; இருப்பினும், யாரேனும் (படைத்தவனின்) வரையறைகள் அனைத்தையும் மீறிச் சென்றால், அப்போது அவரை அல்லாஹ், ஒரேயடியாகப் பிடித்திடுவான்..!
31. வானம், பூமி, அவைகளில் இருப்பவை, மற்றும் வானவர்கள், யாவருமே அல்லாஹ்வின் முன்னே, சிரம்பணிகின்றனர்; அல்லாஹ்வைப் பயந்து – நடுங்குகின்றனர். ஆனால் மனிதனோ, மமதையுடன் மாறுசெய்பவனாகச் சுற்றித் திரிகிறான்.
32. இரண்டு இரண்டு கடவுள்களை அல்ல; ஒரே இறைவனையே வணங்குக! அவனை மட்டுமே அஞ்சி வருக!! என அல்லாஹ் உத்தரவிடுகிறான்.
33. ஒரு பெண்ணிடம் கீழ்த்தரமாக நடந்து கொள்ளுதல், மானுடத்தைக் கொச்சைப்படுத்துவதற்கு ஒப்பாகும். அவளை உயிருடன் புதைப்பது, மனித சமுதாயத்தைக், கொலைசெய்வதாகும்.!
34. அறியாமைக்காலத்தில் (அரபியர்) பெண்களை இழிவாகக்

கருதினர்; அதே சமயம், வானவர்களை அல்லாஹ்வின் பெண் பிள்ளைகள், என்றனர்.. இத்தவறான கருத்து மறுத்துரைக்கப்படுகிறது..!

35. பெண்களுடன், நல்ல அணுகு முறையைக் கடைபிடிக்கக் கற்றுத் தரப்பட்டிருக்கிறது..!

36. அல்லாஹு தஆலா தன் அடியார்களின் பாவங்களுக்காக, உடனுக்குடன் தண்டனை தர சக்திகொண்டவன்! ஆனால் அவ்வாறு செய்தால், அனைவரும் அழிந்தொழிந்திடுவார்கள்..!

37. தண்டனையைக் குறிப்பிட்ட காலம்வரை, தாமதப்படுத்துவது, அல்லாஹ்வின் ஞானத்தின்பாற்பட்டதாகும். இதனால் அடியார்கள் நேர்வழியை வேண்டுவார்கள்..!

38. முஹம்மத் (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு, அல்லாஹ், அவர்களைச் சாட்சியாளராக ஆக்கினான்; திருவேதத்தைத் தெளிவுபடுத்தக் கூடியவராக அனுப்பினான்.. இதற்குப் பின் வேறொரு ஆதாரத்திற்கான அவசியமில்லை..!

39. திருக்குர்ஆன், ஆத்மாவிற்கான உணவு; அது ஆத்மாவின் வாழ்வு! ஏனென்றால் ரூஹ் (ஆத்மா) விண்ணில் இருந்து, அல்லாஹவின் கட்டளைப்படி வருகிறது.. எனவே அதற்கான உணவு, இறுதி-இறை செய்தியின் வடிவில், இறுதி நபி (ஸல்) அவர்கள் மீது, விண்ணில் இருந்து வந்திருக்கிறது. எனவே இப்போது, குர்ஆன் மற்றும் ஸுன்னாவில்தான் முழுமையான நேர்வழி இருக்கிறது.

40. அல்லாஹ் உணவை, ‘சிறப்பான’ உணவு என்கிறான்; அதே சமயம், மதுவைத் ‘தீமைகளின் தாயாகச்’ சித்தரிக்கிறான்.

41. தேனில் மக்களுக்கு ‘நிவாரணம்’ இருக்கிறது; இதனை மருத்துவர்களும் உண்மைப்படுத்துகின்றனர். இவ்வாறு, மார்க்கத்தின் ஒவ்வொரு அம்சத்திலும், ஒரு முஸ்லிமிற்கு, முழுமையான நம்பிக்கை வரவேண்டும்.

42. குழந்தைப் பருவம், வாலிபம், மற்றும் முதுமை என, மனிதனுடைய பலங்களிலும், தகுதிகளிலும், அல்லாஹ்வின் புறத்திலிருந்தே, ஏற்ற இறக்கம், உண்டாக்கப்படுகிறது! மனிதன் முதுமையிலே, குழந்தையின் நிலைக்கு திரும்பி வருகிறான்.!

43. அல்லாஹ் உணவை மக்களுக்கு மத்தியில் பங்கிட்டுவிட்டான். சிலருக்கு சிலரை விட, அதிகம் சிறப்பளித்துள்ளான். சிலருக்கு சிந்தித்து அறியும் திறன் இருக்கிறது எனில், சிலரிடம் செல்வத்தைத் திரட்டுகின்ற ஆற்றல் இருக்கிறது. எனவே ஒவ்வொரு மனிதனும், தனக்குத் தேவையானதை, வணக்கத்தின் மூலமாக வேண்டிப் பெறமுடியும்..!

44. மனிதர்கள், தமக்குத் தாமே எப்படி அநீதமிழைக்கலாம்? அல்லாஹ்தான் அம்மனிதர்களுக்கு உணவளிக்கிறான்;

இருப்பினும் அவர்கள், அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கிறார்கள்..!

45. 'இரண்டு எஜமானர்களிடம் பணியாற்றும் ஒரு சிறுவனை', அல்லாஹ், இணைகற்பிப்பவனுக்கு, உதாரணமாகத் தருகிறான்..!

46. மறுமை நாள், மறைவான ஞானம் தொடர்புடைய அம்சமாகும்; இதனை அல்லாஹ் மட்டுமே அறிவான். இதனை மறைத்து வைத்திருப்பது, அல்லாஹவின் அருளே ஆகும்! இல்லையென்றால், மனிதர்கள் தங்களின் வணக்கங்களிலும், அன்றாட பணிகளிலும் கவலை கொண்டவர்களாகவே காட்சி தருவர்..!

47. செவிப்புலன், பார்வை மற்றும் இதயம், யாவும் அல்லாஹ் தந்த அருட்கொடைகளே! இவைகளுக்கு நன்றி செலுத்துவது, மிகவும் அவசியமானதாகும்.. அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொள்வதே! நன்றி செலுத்துவதன் முதல்படி ஆகும்.!

48. மு.்.மினான அடியான், காற்றிலே பறவைகள் பறப்பதை – அல்லாஹ்வின் ஆற்றலைக் காணுகின்ற போது, அவனது விசுவாசம் (இப்படி) அதிகரிக்கிறது.. அவைகளை அல்லாஹ்வைத் தவிர, எவரும் தாங்கிப்பிடிக்க முடியாது.!

49. வீடுகளில் கிடைக்கும் அமைதி மற்றும் நிம்மதியான வாழ்வின் மதிப்பை, வீடற்றவர்களே உணர முடியும்!

50. இறைத் தூதர், அனைத்து சமூகங்களுக்கும் சாட்சியாளராக இருப்பார்..! காபிர்களுக்காக பரிந்து பேசுகிறவர் எவரும் இல்லை..!! எதற்குமே அவர்களுக்கு அனுமதி கிடையாது..!!!

51. காபிர்கள், மறுமை நாளில், ஒருவரை ஒருவர் பழித்துக் கொள்வர்! 'ரப்பைத்' திருப்திபடுத்த, இப்பொழுது அவர்களுக்கு, அவகாசம் தரப்படமாட்டாது. ஏனெனில் 'கணக்குப் பார்க்கின்ற நேரம்' வந்துவிட்டது.

52. காபிர்கள் ஒருவரை ஒருவர், பொய்ப்பிப்பர்; வசைமாறிப் பொழிவர்! எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை! இன்னும் அவர்களில் யாரும், எவருக்கும் உதவி செய்துகொள்ள இயலாது.!

53. நற்குணங்களைக் கடைபிடிக்க, அல்லாஹ் பின்வரும் கட்டளைகளைத் தருகிறான்: நீதி – பரோபகாரம் - நாணயத்தோடு இருந்திடுக! மானக்கேடானவை – தீயவைகளைத் தவிர்ந்திடுக!!

54. இஸ்லாம் வாக்குறுதியைப் பேண, முக்கியத்துவம் தருகிறது; தனி மனிதனாக இருந்தாலும், குழுவாக இருந்தாலும், தன் வாக்கைக் காப்பாற்றுவதன் மூலமே, அவர்கள் (பிறரின்) நம்பிக்கையைப் பெறுவார்கள் - பலமுடன் திகழ்வார்கள்.

55. அமல் செய்தல் மற்றும் கூலியைப் பெறுதல் இரண்டிலுமே, ஆண், பெண் இரு சாராருமே, சமமான நிலையில் உள்ளார்கள்; இரு பாலாருமே, விசுவாசிகளாக இருப்பின், அல்லாஹ்விடம் சீரிய இடத்தைப் பெறுவார்கள், என அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

56. நல்லறங்கள் அனைத்திற்கும், அடிப்படை, அல்லாஹ்வை ஈமான் கொள்ளுதல் எனும் இறைவிசுவாசமே ஆகும். இது இல்லையேல், ஈமானின் அர்கான் - முக்கியமான இதர அம்சங்கள் நிலைபெறாது ; ‘அமல்’ அழிந்துவிடும்..!

57. ஏகத்துவக் கொள்கைதான், ஒரு மனிதனை, நல்லறம் நோக்கி நடக்கத் தூண்டுகிறது; வாழ்வதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது; ஒரு சீரிய வாழ்க்கையை வழங்குகிறது.!

58. அல்லாஹ் எவருடைய அமலையும் வீணாக்கமாட்டான். ஒரு நன்மைக்குப் பகரமாக, பத்தில் இருந்து 700 மடங்கு வரை அதிகக் கூலி தருகிறான்.. அதே சமயம் அமல்களுக்கான நன்மையைப் பெற, விசுவாசமும், தூய எண்ணமும் நிபந்தனையாகும்.!

59. திருக்குர்ஆனை ஓத(த் துவங்கினால்), அல்லாஹ்விடம், ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு தேடுவது, ஓதுவதற்குரிய ஓர் ஒழுங்கு ஆகும்.. இதன் மூலம் ஷைத்தானிய ஊசலாட்டங்களை விட்டும், அனைத்து விதமான தவறான சிந்தனைகளில் இருந்தும், மனிதன் தூரமாகிறான்.

60. மனத் தூய்மையுடன், தாமாகவே யார் அல்லாஹ்வின்பால் திரும்புகிறார்களோ, அவர்கள் மீது, ஷைத்தானின் அதிகாரம் செல்லாது!

61. மக்கத்து முஷ்ரிகீன் - இணைவைப்பாளர்கள், திருக்குர்ஆனை, ‘முஹம்மத் (ஸல்) அவர்களால், புனையப்பட்டது’ என்றார்கள். இது, தவறான கொள்கையாகும். அகில உலக மக்களையும், பண்படுத்துவதற்காக அருளப்பட்ட திருமறையை (ஆய்ந்து) பார்க்காமல், கண்ணை மூடிக்கொள்வதாகும்.

62. மக்கத்து முஷ்ரிக்குகள், திருக்குர்ஆனின் வசனங்களை மாற்றியமைக்கச் சொன்னார்கள்; நபி (ஸல்) அதனை ஏற்காத பட்சத்தில், அவர்கள், ‘திருக்குர்ஆன் இட்டுக்கட்டப்பட்ட வேதம்’ எனக் கூறலானார்கள். ஆனால் இதைக் கொண்டுவந்தவர், நம்பிக்கைக்குரிய ஜிப்ரயீல் (அலை) ஆவார் ; ஓதிக்காட்டியவரோ, உண்மையாளரும் நம்பிக்கையாளரும் ஆவார்.

63. இவ்வேதத்தின் மீது, அவர்கள் நம்பிக்கை கொள்ளாத காரணத்தால், இந்த வேதத்தால், அவர்களுக்குப் பயன் எதுவும் விளையாது; இதன் உண்மைத் தன்மையை உணர்ந்திடவும்

இயலாது; அவர்களின் அலட்சியத்தால், அவர்களுக்குக் கிடைக்கப்போவது 'நிரந்தர வேதனையே' ஆகும்.

64. மனதில் முழுமையான நம்பிக்கை இருக்கின்றபோது, நிர்ப்பந்த நிலையில், வாயால் குப்ரான வார்த்தைகளை மொழிந்திட நேர்ந்தால், அதற்கு அனுமதி இருக்கிறது.. ஆனால் ஈமான் கொண்டபிறகு,. மறுபடியும், குப்ரை – நிராகரிப்பை நோக்கித் திரும்புவோருக்குத் 'தண்டனை' இருக்கிறது.

65. அநியாயக்கார மக்கத்து இணைவைப்பாளர்கள், முஸ்லிம்களை, அவர்கள் ஏற்றிருந்த மார்க்கத்திற்காகவே, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கினார்கள். அதன் விளைவாக அவர்கள், அங்கிருந்து ஹிஜ்ரத் செய்து, வெளியேறும் நிலை ஏற்பட்டது! அல்லாஹ் அந்த மு.்.மின்களுக்கு, சுவனத்தையும் மன்னிப்பையும் வாக்களித்தான்.

66. மறுமைநாளில் ஒவ்வொருவரும், தாம் தண்டனையில் இருந்து தப்பித்திட 'எனது நிலை,. எனது நிலை..' என தன்னைப் பற்றியே, எண்ணி ஏங்குவர். - இதனையே, 'கேடு' எனக் குறிப்பிடப்படுகிறது.

67. அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகளை மறுப்போருக்கு, பயங்கரமான வேதனை, வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வேதனையை ருசிப்பதற்காக, 'அமைதியான நிலையை, அல்லாஹ் அச்சமானதாக மாற்றுவான்; தாகம் மற்றும் பசி எனும் ஆடைகளையும் அணிவிப்பான்..!'

68. ஹராமானவைகளையும், ஹலாலானவைகளையும் வரையறுப்பவன் அல்லாஹ் மட்டுமே! இது அவனுக்கே உள்ள உரிமை!! எந்த மனிதரும் இதில் தலையிட இயலாது..!!!

69. ஷரீஅத் தீர்ப்புக்களைத், தன் இஷ்டப்படி வழங்குகின்ற குற்றத்தைச் செய்பவன், 'பொய்யனாகத்தான்' இருப்பான்.!

70. அல்லாஹு தஆலா, தூய உணவை உண்பதற்கு உத்தரவிடுகிறான்; அத்துடன் அவனுக்கு நன்றியுடன் இருப்பதற்கும் ஏவுகிறான்.!

71. பாவம் செய்த ஒருவர், அப்பாவத்தில் நிலைத்திருக்காமல், 'மனதார' பாவமன்னிப்பைத் தேடினால்,. அத்துடன் தொடர்ந்து நல்லறங்களில் ஈடுபட்டால், அவருக்கு மறுமைநாளில் அல்லாஹ்வின் அருள்கிடைக்கும்.

72. அழைப்புப் பணி, முழுக்க முழுக்க, அல்லாஹ்வை நோக்கியே, இருக்கவேண்டும்; ஒரு தனிமனிதருக்காகவோ, ஒரு கூட்டத்திற்காகவோ, அல்லது தான் உருவாக்கிய மத்ஹபிற்காகவோ இருக்கலாகாது.!

73. அழைப்பு (த.்.வா) நுட்பமான முறையில், விடுக்கப்பட வேண்டும்; அத்துடன் முன்னால் இருப்பவரின் நிலைமைகள் மற்றும்

கல்வியறிவு கவனிக்கப்பட வேண்டும்.!

74. ஒரு விஷயம், அழகிய உபதேசத்தால் உள்ளத்தில் பதிகிறது.. மென்மை தாக்கத்தை ஏற்படுத்துகிறது..! போதனையில் மென்மை இருந்தால், நெறிதவறிய உள்ளத்திற்கு, நேர்வழி கிடைக்கிறது..!!

75. 'ஷரீஅத்' திற்கு முரண்படாத வகையில், அழகிய முறையில், தர்க்கம் செய்திடுக! 'தாயீ' - இறையழைப்பாளரின் எண்ணம், சத்தியத்தை நிலைநாட்டுவதைத் தாண்டி, வேறெதுவுமாய் இருக்கக் கூடாது.!

76. பழிவாங்குதல், சரிக்குச் சரியாகத்தான் இருக்க வேண்டும்; இருந்தாலும், பொறுமையாக இருப்பதையும் மன்னித்து மறப்பதையும், சிறப்பானவை என, இஸ்லாம் போதிக்கிறது..!

77. மக்கள் நேர்வழியை விட்டு விலகிடும்போது, நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்; ஏனெனில், ஒரு 'தாயீ' உடைய பணி, எடுத்துரைத்தல் மட்டுமே! நேர்வழியும் வழிகேடும் அல்லாஹ்வின் கரங்களில் உள்ளவை ஆகும்.

78. ஏகத்துவ அழைப்பிற்கு, அல்லாஹ்வின் உதவி, வந்தே தீரும்; ஏனென்றால் அல்லாஹ் மு.ஃ.மின்களுடன், முத்தகீன்களுடன், மற்றும் முஹ்ஸினீன்களுடன் இருக்கின்றான்; காபிர்கள் வெறுத்தாலும், இம்மார்க்கம் மிகைத்தே தீரும்.

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

❖ முந்தைய ஸூராக்களில், காபிர்களின் சூழ்ச்சிகளும், எண்ணங்களும் கூறப்பட்டுள்ளன! இந்த ஸூராவில், எச்சரிக்கை மற்றும் 'சத்தியம் பெறப்போகும் ஜெயம்' குறித்த விபரங்கள் இடம்பெற்றுள்ளன..!!

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

وَإِن تَعُدُّوا نِعْمَةَ اللَّهِ لَا تُحْصُوهَا ۗ إِنَّ اللَّهَ لَغَفُورٌ رَّحِيمٌ 16:18

16:18. இன்னும் அல்லாஹ்வின் அரு(ட் கொடைக)ளை நீங்கள் கணக்கிட்டால், அவற்றை (வரையறை செய்து) நீங்கள் எண்ணி முடியாது! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், மிகக் கருணையுடையோனாகவும் இருக்கின்றான்.

إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ وَيَنْهَىٰ عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ 16:90

16:90. நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

## அல்ஹதீஸ்

ஸுஹைப் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) கூறினார்கள்: ‘‘இறைவிசுவாசியின் விஷயமே, அதிசயமாக உள்ளது.. அவனது விஷயங்கள் ஒவ்வொன்றுமே, சிறப்பானதே! இந்நிலை ஒரு மு.்.மினுக்கு – விசுவாசிக்கு மட்டுமே வாய்க்கும்; அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்ற போது, அவன் நன்றி செலுத்துகிறான்; இந்த நன்றி (உணர்வு) அவனுக்கு சிறப்பைத் தருகிறது.! அவ் விசுவாசிக்கு துன்பம் வருகின்றபோது, பொறுமை காக்கிறான்; இப்படிப் பொறுத்திடும் தன்மையால், அவன் சிறப்பை அடைகிறான். (முஸ்லிம் : 2999)